JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 04 | June 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10




தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய
பரிபூரண சித்தத்தை செய்வதற்கு அவர் காட்டும்


# திசையை தீர்மானி


# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

## உள்ளே


04


12


24


32

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.



அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

***எனக்குப் பிரியமான வாலிபர்களே!***

இயேசுவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

வாலிபர்களாகிய நீங்கள் பலவான்களாக இருக்கிறீர்கள் என்று வேதம் சொல்கிறது. தேவன் உங்களுக்காக அழகிய திட்டத்தை வைத்திருக்கிறார். யாரெல்லாம் தேவனுடைய திட்டத்திற்கு தங்களை அர்ப்பணித்து கீழ்ப்படிந்து செயல்படுகிறார்களோ, அவர்கள் வாழ்க்கையில் ஒரு மேன்மையைக் காண முடிகிறது. யாரெல்லாம் தேவன் தங்களுக்கு முன்பாகக் காண்பிக்கும் திசைக்குச் செல்லத் தயங்கி நிற்கிறார்களோ, அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் வீணான குழப்பங்களும், வேதனைகளும், ஆபத்துகளும் அதிகம்.



அநேக நேரம் உலக ஞானம் தேவனுடைய திட்டத்தைச் செய்வதற்கு தடையாக மாறிவிடுகிறது. தீர்க்கதரிசி யோனாவிற்கு தேவனுடைய வார்த்தை உண்டாகி, ''நீ நகரமாகிய நினிவேக்கு போய்க் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கி'' என்று சொன்னார். ஆனால் யோனாவிற்கு அந்தத் திட்டமும், திசையும் பிடிக்கவில்லை என்பதால், யோனா அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல், தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் வேறு திசைக்குப் போகிறார். முடிவில் பல ஆபத்துகளையும் கீழ்ப்படியாமையின் விபரீதங்களையும் சந்திக்க நேர்ந்தது. பிறகு மனந்திரும்பி தேவ சித்தத்தை செய்து முடித்தார். தேவனுடைய திட்டமும், ஞானமும் கிரகிக்க முடியாதவை; அவற்றை முழுவதும் தேவன் ஒரே நாளில் சொன்னால் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. நாம் ஒவ்வொரு பகுதியாகக் கீழ்ப்படிய கீழ்ப்படிய தேவன் சொல்லிக் கொண்டே இருப்பார்.

தேவனுடைய சித்தத்திற்கும் எழுப்புதல் திட்டத்துக்கும் அப்படியே கீழ்ப்படிந்து, அவர் காட்டும் திசைக்குச் செல்கிற வாலிபர்களைத் தேவனுடைய உள்ளம் தேடிக் கொண்டிருக்கிறது. தேவன் தேடும் வாலிபன் நீயாக இருக்கலாமே! நீ அர்ப்பணித்தால் அவருடைய அற்புத வழிநடத்துதலை உன் வாழ்க்கையிலும் பார்க்க முடியும்.

**தேவனுக்குக் கீழ்ப்படிந்து** அவர் காட்டும் திசையில் பயணித்த ஒவ்வொரு அப்போஸ்தலர்களும் ஒரு பெரிய எழுப்புதலை அவர்கள் பட்டணத்திலும் தேசத்திலும் கொண்டு வந்தார்கள்.

**தேவன் காட்டும் திசையைத் தீர்மானித்துத் தீர்க்கமாய்**, துரிதமாய் தூது பணியைச் செய்யத் தீவிரப்படுங்கள். தேசம் இயேசுவை அறிய வேண்டும்!

**தாகத்தோடும், பாரத்தோடும் வாழும் பாரத மக்கள்**, தேவன் பக்கம் திரும்பும் திசையைக் காட்ட உங்களைப் போன்ற தீமோத்தேயுக்கள் எழும்ப வேண்டும்.

**எழும்பு வாலிப மகனே, மகளே!**
**தேவன் தேடும் தீமோத்தேயு நீ தான்!!**

*கிறிஸ்துவின் பணியில்*
**மோகன் சி. லாசரஸ்**

# புது சிருஷ்டி!

சாட்சி தொகுப்பு: வில்லியம்

**தென் தமிழகத்தில் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து, பாவ பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு, சாவை நோக்கிச் சென்றபோது தேவனால் விடுவிக்கப்பட்டு,**



**இன்றைக்கு அநேகருக்கு வைராக்கியமாகச் சுவிசேஷம் அறிவித்து வரும் வாலிபரின் வாழ்க்கை எப்படி மாறியது என்பதை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**



### உங்களது குடும்பம் மற்றும் இளமைப் பருவம்பற்றிச் சொல்லுங்களேன்?

எனது பெயர் நம்பிராஜன். நான் திருநெல்வேலி மாவட்டத்தில் இயேசுவை அறியாத மிகவும் பக்தி வைராக்கியமான குடும்பத்தில் எனது பெற்றோருக்கு முதல் மகனாகப் பிறந்தேன். எனக்கு ஒரு தம்பி, ஒரு தங்கை இருக்கிறார்கள். எனது அப்பா ஓட்டுநராக இருக்கிறார். என் தம்பி, தங்கை இருவரும் தனியார் நிறுவனங்களில் வேலை பார்த்து வருகிறார்கள். நான் ஒரு Plumber & Electrician ஆக வேலைப் பார்த்து வருகிறேன். எங்கள் குடும்பம் மிகவும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். சிறு வயதிலேயே நான்கு முறை கோயிலுக்குப் போய் மொட்டைப் போட்டு இருக்கிறேன். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூஜைகள் செய்வது போன்ற நிறைய சடங்காச்சாரங்களை பின்பற்றி வந்தோம். வருடத்திற்கு ஒருமுறை குலதெய்வம் கோவிலுக்குக் குடும்பமாகச் சென்று பூஜை செய்து வருவோம். எனக்கும் அதிகமான கடவுள் நம்பிக்கை உண்டு, மிகவும் பக்தி வைராக்கியமாக இருந்தேன். கிறிஸ்தவர்களைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது. மார்கழி மாதம் காலையில் 5 மணிக்கு எழுந்து பட்டைப் போட்டுப் பஜனைக்கு செல்வேன். இப்படி சிறு வயதிலிருந்து மிகவும் பக்தியாக வளர்க்கப்பட்டேன்.

**பக்தியாக வளர்க்கப்பட்டீர்கள்... உங்கள் படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

படிப்பில் மிகவும் Average Student தான். எனது progress report கிடைக்கும் போதெல்லாம் அப்பாவிடம் நிறைய அடிகள், திட்டுகள் வாங்குவேன். என்னை 'மாடு மேய்க்க போ' என்று சொல்லுவார். படிப்பு எனக்கு ஏறவே இல்லை. அப்பாவிடம் ரிப்போர்ட் கார்டு காட்ட பயந்து நானே கையெழுத்துப் போட்டுக் கொடுப்பேன். அதற்கும் நிறைய அடி வாங்குவேன். 10ம் வகுப்புவரை படித்து எப்படியோ வெற்றிப் பெற்றேன். பத்தாம் வகுப்பு வெற்றி பெற்றதே பெரிய விஷயம். அதற்கு மேல் படிக்க முடியாது என்று சொல்லிப் பள்ளி படிப்பை நிறுத்தி விட்டு, வேலைக்குச் செல்ல ஆரம்பித்தேன். அப்பொழுது ஒரு அண்ணன், ''ஏன் நீ வேலைக்குச் செல்கிறாய்? IT படித்தால் உனக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்'' என்று சொன்னதால் IT மெக்கானிக்கல் ஒரு வருடம் படித்தேன். அப்பொழுதும் எனக்குப் படிப்பு வரவில்லை. இது தான் எனது இளமை பருவ காலமாக இருந்தது.

**படிப்பு ஏறவில்லை... அப்படியானால் அதன்பிறகு என்ன செய்தீர்கள்?**

பயிற்சி முடித்தபின்பு அப்பாவின் நண்பர் workshopல் வேலைக்குச் சேர்த்து விட்டார்கள். அங்கு 1½ வருடங்கள் நன்றாக வேலைப் பார்த்தேன். எனது முதலாளி ஒரு Chain Smoker ஆனதால் அவர் smoke பண்ணுவதைப் பார்த்து எனக்கும் ஒரு ஆசை வந்தது. ஆனால் நான் அதைச் செய்யவில்லை. அந்த நேரத்தில் எனக்கு நிறைய நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களோடு இணைந்து ஊர் சுற்றுவது, ஏரியாவில் நம்மைப் பார்த்தால் எல்லோரும் பயப்பட வேண்டும், கெத்து காண்பிக்க வேண்டும் என்று பல காரியங்களை நாங்கள் இணைந்து செய்து வந்தோம். புகை, கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் என் நண்பர்கள் பயன்படுத்துவார்கள். எனக்கும் கொடுப்பார்கள். நான் வேண்டாம் என்று சொன்னால், ''இந்த வயதில் இதையெல்லாம் செய்யாமல், எந்த வயதில் செய்யப் போகிறாய்'' என்று கேட்பார்கள். முதலில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும், பயன்படுத்த ஆரம்பித்தபின்பு நன்றாக இருந்தது. அதைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தேன். ஆனால் அதற்குப் பின்பு பெரிய பிரச்சனை வரும் என்று அப்போது எனக்குத் தெரியவில்லை.



**ஐயையோ... சிறு வயதிலேயே போதைப் பொருட்கள் பயன்படுத்தின பின்பு உங்கள் வாழ்க்கை மாறியதா?**

போதைப்பொருட்களுக்கு மிகவும் அடிமையானேன். இதனால் வேலையை இழந்தேன். நாளடைவில் வீட்டில் திருடிப் புகைப் போன்ற பழக்கங்களுக்குச் செலவழித்தேன். நண்பர்களுக்கும் வாங்கிக் கொடுக்க ஆரம்பித்தேன். போதைப் பொருட்களுக்கு அடிமையானதால் மிகவும் மனஅழுத்தம் உண்டாகி, தவறான முடிவு எடுக்கும் அளவிற்கு சென்றேன். தவறான முடிவு எடுப்பதற்கு முன்பாகக் கடைசியில் யாரிடமாவது இதைச் சொல்லிவிட்டு சாகலாம் என்று எனக்குத் தெரிந்த ஒரு அத்தையிடம் சொல்லலாம் என்று சென்றேன். அப்பொழுது அவர்கள் என்னை நாலுமாவடிக்கு அழைத்து வந்தார்கள்.



அன்றைக்கு மோகன் uncle பாவத்தைக் குறித்தும், பாவம் பயங்கரமானது என்பதைக் குறித்தும் பேசினார்கள். அது எனக்கே பேசுவது போல் இருந்தது. ஜெப வேளையில், ''ஒரு வாலிபன் இந்தக் கூடுகை முடிந்த பின்பு தற்கொலை செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்து வந்திருக்கிறீர்கள், ஆனால் இன்றைக்கு ஆண்டவர் உங்களுக்கு விடுதலைக் கொடுத்து, உங்களை வாழ வைக்கப் போகிறார்'' என்று சொன்னபோது, ஒரு பிரகாசமான ஒளி என்னைத் தொட்டதும் என்னை அறியாமல் பின்னால் இருந்த நான் முன்னால் போய் விழுந்தேன். அப்பொழுது எனக்குள் போராடிக் கொண்டிருந்த அசுத்த ஆவி வெளியே வந்தது. நான் ஒரு புது மனிதனாக மாறினேன்.

**சூப்பர்... புது மனிதனாக மாறின பின்பு உங்கள் வாழ்க்கையில் வந்த மாற்றங்கள் என்ன ?**

அதன் பிறகு எனக்கு அந்தப் பாவ பழக்கங்கள் எதுவுமே இல்லை. எனக்கு வேலை கிடைத்தது. என் வாழ்க்கையை ஆண்டவர் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். 2022ஆம் ஆண்டு நாலுமாவடியில் நடைபெற்ற வாலிபர் முகாமில் கலந்து கொண்டபோது Mohan

uncle, Vincent uncle சுவிசேஷம் அறிவிப்பதன் அவசியத்தையும், ஜெபத்தை குறித்தும் பேசினார்கள். தேசத்தின் மக்கள் தேவையோடு இருக்கிறார்கள் என்பதை அறிந்து நான் எனக்குக் கிடைக்கிற நேரங்களில் சுவிசேஷம் அறிவிக்க என்னை அர்ப்பணித்தேன். விடுமுறை நாட்களில் திருநெல்வேலி பகுதியில் உள்ள வாலிபர்களோடு இணைந்து, சுவிசேஷ ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். கைப்பிரதி கொடுத்துச் சுவிசேஷம் அறிவித்ததின் மூலம் அநேக ஆத்துமாக்களை கர்த்தர் பக்கம் திருப்ப முடிந்தது.

**சூப்பர்... சுவிசேஷம் அறிவிக்க ஆரம்பித்தீர்கள்... நீங்கள் சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தபோது ஏதாவது அற்புதம் நடைபெற்றதா? அதைச் சொல்ல முடியுமா?**

நாங்கள் கிராம ஊழியத்திற்கு சென்றபோது, ''புறமதத்தினருக்கு இங்கு அனுமதி இல்லை'' என்று போர்டு வைக்கப்பட்டிருந்த ஊரில் எங்கள் குழுவினர் எங்களை விட்டுச் சென்றார்கள். ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு கிராமமாகக் காணப்பட்டது. சிறிது தூரம் நடந்து சென்றபோது 2 பாட்டிமார்கள் ஒரு திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் ''இயேசு உங்களை நேசிக்கிறார்'' என்று சொல்லிக் கைப்பிரதி கொடுத்துக் கொண்டு இருக்கும்போது, ''வியாதிஸ்தர்களுக்காக ஜெபியுங்கள்'' என்று ஆவியானவர் தன்னிடம் பேசுவதாக என்னுடன் வந்த அண்ணன் சொன்னார். உடனே அந்தப் பாட்டிமாரிடம் ''இந்தக் கிராமத்தில் யாராவது வியாதியோடு இருக்கிறார்களா? அவர்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்'' என்று கேட்டோம். உடனே அவர்கள் ''அந்தக் கடைசி வீட்டில் ஒருவர் அநேக நாட்களாய் வியாதியோடு இருக்கிறார்'' என்று சொன்னார்கள். நாங்களும் அந்த வீட்டைத் தேடி கடைசி எல்லைக்குச் சென்று அங்கு இருந்த ஒரு அம்மாவிடம் விசாரித்தபோது அவர்களே எங்களை அந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். உள்ளே சென்றபோது அந்த ஐயா urine bagஉடன் படுத்திருந்தார். ''நான் இயேசுவை அறியாத குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டேன்'' என்று என்னுடைய சாட்சியைச் சொல்லிச் சுவிசேஷம் அறிவித்து நாங்கள் இருவரும் அவருக்காக ஜெபித்தோம். ஜெபித்துக் கொண்டிருக்கும்போது ஆவியானவர் இறங்கி ஒரு தரிசனத்தைக் காண்பித்து, ''அவரை எழுந்து நடக்க சொல்'' என்று சொன்னதும், அந்த ஐயாவின் கரத்தைப் பிடித்து ''எழுந்து நடவுங்கள்'' என்று சொன்ன மாத்திரத்தில் அவர் எழுந்து நடந்தார். வாய் கோணி பேசாமல் இருந்தவரிடம் ''வாயைத் திறந்து இயேசு என்று சொல்லுங்கள்'' என்று சொன்னவுடன் இயேசு என்று சத்தமாகக் கூப்பிட்டார். நாங்கள் ஜெபித்து விட்டு வந்து ஒரு வாரம் கழித்து விசாரித்தபோது, அவர் முற்றிலும் சுகமாகி வேலைக்குச் செல்வதாகக் கூறினார்கள். இன்றைக்கு அந்தக் குடும்பம் முழுவதும் இயேசுவை ஏற்றுக் கொண்டு, சபைக்குச் சென்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வாலிபர்களாகிய நமக்கு இந்த வாலிப வயதில் சாத்தான் தீமையான காரியங்களை நன்மையான காரியமாக காண்பித்து பாவத்தில் விழப்பண்ணுவான். சாத்தானின் கண்ணிக்கு நாம் தப்ப வேண்டுமானால் கர்த்தரின் வார்த்தையை படித்து தியானித்து இருதயத்தில் வைத்து வைக்க வேண்டும். வேத வசனத்தினால் தான் சாத்தானை நாம் மேற்கொள்ள முடியும். அதுமட்டுமல்லாமல் தேவனை விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது தான் சாத்தான் விரிக்கும் கண்ணியிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். நம்மையும் இந்த எழுப்புதலில் பயன்படுத்துவார்.



**அன்பான வாலிபர்களே! இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து, பக்தியாக வளர்ந்த சகோ. நம்பிராஜன் அவர்களைப் பாவத்தின் பிடியிலிருந்து விடுவித்து, ஜீவனைக் காப்பாற்றி இன்றைக்கு அவர் மூலமாக ஆண்டவர் பெரிய காரியங்களைச் செய்து வருகிறார். நீங்கள் கூடப் பாவத்தின் பிடியில் இருக்கிறேன் என்னை விடுவிப்பார் யாரும் இல்லையே என்று கலங்கி நிற்கிறீர்களா? இயேசுவை நோக்கிப் பாருங்கள்... உங்களையும் விடுவித்து அவர் பிள்ளையாக மாற்றி அநேகருக்கு ஆசீர்வாதமாக வைப்பார்.**

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே விடுகதை வடிவில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை கண்டுபிடித்துப் பதில்களை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1. மூன்றெழுத்துக் கொண்டவள் நான், எல்லாருக்கும் தாய் நான். கடை இரண்டில் ஆயுதம் கொண்டவள் நான். நான் யார்?

2. ஐந்தெழுத்துக் கொண்டவன் நான், தேவனின் சிநேகிதன் நான். கடை இரண்டில் நோவாவின் மகன் பெயர் கொண்டவன் நான். நான் யார்?

3. நான்கெழுத்துக் கொண்டவன் நான், நூறு மடங்கு அறுவடை செய்தவன் நான். முதலெழுத்து ஓர் உயிரியாம், கடை மூன்றோ பொருள் சேகரித்து வைக்க உதவுமாம். நான் யார்?

4. மூன்றெழுத்துக் கொண்டவன் நான், சேஷ்ட புத்திரன் நான். கடை இரண்டு உணவு ஒன்றின் பெயராம். நான் யார்?

5. இரண்டெழுத்துக் கொண்டவன் நான். ஆசாரிய பட்டத்துக்குரியவன் நான். கடை எழுத்து ஓர் ஆங்கில எழுத்தைச் சுட்டி காட்டுமாம். நான் யார்?

6. ஐந்தெழுத்துக் கொண்டவன் நான், கோத்திர பிதாக்களில் ஒருவன் நான். கடை இரண்டில் வாகனம் பெயர் கொண்டவன் நான். நான் யார்?

7. ஐந்தெழுத்துக் கொண்டவன் நான், எத்தனின் கடைக்குட்டி நான். கடை இரண்டில் அசைவ உணவு ஒன்றின் பெயர் கொண்டவன் நான். நான் யார்?

8. மூன்றெழுத்துக் கொண்டவன் நான், ஆதாமின் பேரன் நான். கடை இரண்டு உடலுறுப்பு ஒன்றின் பெயரை ஆங்கிலத்தில் கூறுமாம். நான் யார்?

9. ஐந்தெழுத்துக் கொண்டவன் நான். கூடாரவாசி நான். கடையிரண்டு ஆயுதம் ஒன்றினை சுட்டுமாம். நான் யார்?

10. ஐந்தெழுத்துக் கொண்டவள் நான். ராஜாவுக்கு மனைவி நான். மூன்றும் நான்கும் பேழை கட்டிய நீதிமான் பெயரைச் சூட்டுமாம். நான் யார்?

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.06.2025




**கடந்த மாத வெற்றியாளர்**

சகோதரி **ஹெப்சி, வள்ளியூர்**

**அவர்களை வாழ்த்துகிறோம்.**

**கடந்த மாத விடைகள்**

1) I கொரி. 3:8
2) I யோவா. 4:8
3) 2 கொரி. 5:6
4) பிரசங்கி 9:12
5) ஓசியா 14:5
6) பிரசங்கி 4:5

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

Heart Beat

# IPS

ஆலோசனை: அலி



## அன்புள்ள அண்ணன்!

நான் சிறு வயதிலிருந்தே IPS ஆக வேண்டும் என்ற இலக்கோடு நன்றாகப் படித்து வந்தேன். எனக்கு இப்பொழுது 24 வயதாகிறது. UPSC தேர்வு 2 முறை எழுதித் தோல்வி அடைந்தேன். மிகவும் சோர்ந்து போன நிலையில், என்னுடைய பழைய கல்லூரி நண்பர்களோடு நேரத்தைச் செலவழிக்க ஆரம்பித்தேன்.

ஒவ்வொரு முறையும் என்னை IPS ஆபீஸராகக் கனவு கண்டு அது பலிக்கவில்லையே என்ற மன அழுத்தம். அதன் விளைவாக ஒரு நண்பனின் ஆலோசனையின் பெயரில் என் இலக்கை மறந்து இன்னொரு வேலையில் சேர்ந்து விட்டேன்.

ஒவ்வொரு நாளும் 5 முதல் 6 மணி நேரம் படிப்பில் கவனம் செலுத்தி படித்த எனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்ற விரக்தியில் சற்று திசை மாறி, தவறான பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டேன். வாழ்க்கையை உயர்ந்த இலட்சியத்தோடு ஆரம்பித்த நான், இன்றைக்கு சரிந்து கொண்டு போகிறேன். என்னை நினைத்து என் பெற்றோர் மிகவும் துக்கப்படுகிறார்கள்.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மிகவும் சோர்ந்து போய் உடைந்து போய் வாழ்க்கையில் தோல்வி அடைந்தவனாய் இருக்கிறேன். என்னால் எழும்ப முடியுமா? Lifeல் Second Chance கிடைக்குமா? நான் எழும்புவதற்கு Help பண்ணுங்களேன்! Please.

- சரத், கிருஷ்ணகிரி.

அன்புத்தம்பி சரத், உங்கள் மனதில் உள்ள வேதனை எனக்குப் புரிகிறது. கடின உழைப்புக்கு பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு படித்து, வெற்றி பெறாமல் தோல்வியைத் தழுவியது எவ்வளவு ஏமாற்றத்தையும் வேதனையையும் தந்துள்ளது என்று புரிகிறது. ஒவ்வொரு முறையும் IPS ஆபீஸராக உங்களை நீங்களே உங்கள் கனவில் பார்த்தது, நனவாகவில்லை என்ற மன அழுத்தமும் புரிகிறது.

சரத், UPSC, IPS தேர்வு என்பது மிக அழகிய இலக்கு. எல்லா மாணவர்களும், வாலிபர்களும் இந்தப் படிப்பையோ, பாதையையோ தேர்ந்தெடுப்பதில்லை. காரணம் ஒருபக்கம் அதிக நாட்டம் இல்லை, மறுபக்கம் கடினமாக உழைக்க வேண்டும், கண் விழித்துப் படிக்க வேண்டும் என்று இப்படி பல சவால்கள் இருப்பதால், பலர் அந்தப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை.


நல்ல இலக்கைத் தீர்மானித்த நீங்கள், அதின் வழியைத் திட்டமிட தவறியது ஏன்? 2 முறை தோல்வி, உங்கள் வாழ்க்கையின் தோல்வி என்று எண்ணியது தான் தவறு. இன்னும் 4 முறை முயற்சித்திருக்கலாமே. உங்களின் தகுதி மற்றும் உங்களின் சமுதாய பின்னணியைப் பொறுத்து, ஒவ்வொரு Category மக்களும் இத்தனை முறை முயற்சிக்கலாம் என்று அரசு வரையறை வைத்திருப்பது உங்களுக்கு ஏன் தெரியாமல் போனது. 2 முறை முயற்சித்து விட்டு விட்டால் எப்படி வெற்றியைச் சுதந்தரிக்க முடியும்.



**பல தோல்விக்குப் பிறகு தான் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வெற்றி பெற்றார்.**

**பல படும் தோல்விகளுக்குப் பிறகு தான் தாமஸ் ஆல்வா எடிசன் மிகப்பெரிய Light Bulbஜ கண்டுபிடித்து அரங்கேற்றினார்.**

**பல சொல்லி முடியாத தோல்விகளைத் தழுவியபிறகு தான் Steve Jobs, Apple கம்பெனியை நிறுவினார். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்...**



சில முறை முயற்சித்து விட்டு விட்டால், விரக்தியும் சோர்வும் தான் வரும். ஆனால் விடாமுயற்சியையும் தன்னம்பிக்கையையும் இழக்காமல் ஓடினால் வெற்றி நிச்சயம் என்பதை மறந்து போக வேண்டாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது...

- உங்கள் இலக்காகிய IPS studiesக்கு மறுபடியும் திரும்ப வேண்டும்.
- இந்த முறை 2 முறை அல்ல; ஜெயிக்கும் வரைக்கும் முயற்சி செய்வேன் என்று தீர்க்கமான ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.
- 5 முதல் 6 மணி நேரம் எடுத்து படித்தும், படிக்க முடியாமல் 2 முறை தோல்வி என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். அதனால் படிப்பு நேரத்தை அதிகரிக்க என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை யோசிக்க வேண்டும். குறைந்தபட்சம் 10-14 மணி நேரம் படிக்க வேண்டும்.
- தாமஸ் ஆல்வா எடிசன் போல 10,000 முறை தோல்வியல்ல, அந்த முறை அந்த light Bulb எரியாது, வேறு செயல்முறை உண்டு என்று அடுத்த முறை முயற்சி செய்தது போல, மன உறுதியும், ஜெயிப்பேன் என்ற மன வலிமையும் கொள்ள வேண்டும்.
- அந்த நேரத்தில் இலக்கை விட்டு, பின்திரும்பவும் கூடாது, இலக்கை மாற்ற நினைக்கவும் கூடாது.
- சரத், 'IPS என்ற Badge Shoulderல் ஏறும் வரை ஓயமாட்டேன்' என்ற உறுதி மனதில் இருக்க வேண்டும்.
- எந்தப் பெற்றோர் வேதனைப்பட்டார்களோ, அதே பெற்றோர்கள் வியக்கும்படி கடினமாகப் படிக்க முற்படுங்கள், சாதித்துக் காட்டுங்கள்.

## நீங்கள் தவிர்க்க வேண்டியது...

- எந்த நோக்கத்திற்காகத் தேவையில்லாத பழக்கங்களை விட்டீர்களோ, பழைய நண்பர்களை விலக்கினீர்களோ, அவர்கள் பக்கமோ, அவர்கள் அருகில் செல்வதையோ அறவே தவிர்க்கவும்.
- எந்தத் தோல்வி உங்களைப் பின்னிட்டு திரும்பச் செய்ததோ, அந்தத் தோல்வி ஒருவேளை மறுபடியும் உங்களைச் சந்தித்தால், சோர்ந்து போய்த் திரும்பக் கூடாது. மாறாக ''இன்னும் ஒருமுறை முயல்வேன்'' என்று முன்னேற வேண்டும்.

சரத், ஒருமுறை உங்களைப் போல் தாவீது என்ற மனிதனும் எல்லாவற்றையும் இழந்து, மிகவும் சோர்ந்து போனார். ஆனால் கர்த்தர் அவரைப் பெலப்படுத்தி, மறுபடியும் யுத்தம் பண்ணவும் தன் எதிரிகளைத் தொடர்ந்து போய்த் தான் இழந்த எல்லாவற்றையும் திருப்பிக் கொள்ளவும் உதவி செய்தார்.



தாவீதை மறுபடியும் முயற்சி செய்து நம்பிக்கையோடு செயல்பட வைத்து, அவனுக்குப் பெரிய வெற்றியைத் தந்த தேவன், உங்களுக்கும் வெற்றியைக் கொடுப்பார். பயப்பட வேண்டாம், நம்பிக்கையோடு முன்னேறிச் செல்லுங்கள். இந்த முறை தேவன் உங்களைப் பெலப்படுத்துவார்.

**“சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்” (ஏசாயா 40:29).**

***All the Best Sarath, IPS.***

செய்தி: மோகன் சி. லாசரஸ்

# உபத்திரவத்தில் உயர்வு!!





**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).**

இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. தீமையை நன்மையாய் மாற்றுகிற தேவன், இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் காணப்படும் தீமைகளை நன்மையாக மாற்றப் போகிறார். பிள்ளைகள் தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்தால் உடனே தவறான முடிவு எடுத்து விடுகிறார்கள். அந்தத் தோல்விக்குள் நன்மை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தேவனிடத்தில் அன்புகூருகிற ஒரு பிள்ளைக்குத் தோல்வி ஏற்பட்டால், முடிவு நன்மையாக இருக்கும். ஒரு ஆண்டவருடைய பிள்ளை நஷ்டத்தின் மத்தியில் நடந்து போனால் சோர்ந்து போகக் கூடாது. அந்த நஷ்டத்தை ஆண்டவர் இலாபமாக மாற்றப் போகிறார் என்று விசுவாசிக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் நிந்தைகள், நெருக்கங்கள் மத்தியில் கடந்து வந்தீர்களானால், நாளைக்கு அதே இடத்தில கனப்படுத்தப்படுவீர்கள், உயர்த்தப்படுவீர்கள். சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும் என்பது தான் ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம். இன்றைக்கு உங்கள் வாழ்வில் நடக்கிற எல்லா தீமைகளையும் நன்மையாக மாற்றப் போகிறார். முடிவு நன்மையாக இருக்கும்.




## உபத்திரவத்தில் யோசேப்பின் உயர்வு

வாசிக்க – **சங்கீதம் 105:17-22**

யாக்கோபின் மகன் யோசேப்பு. யாக்கோபு பெரிய செல்வந்தர். கர்த்தரால் அழைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டவர். யாக்கோபுக்கு, யோசேப்பு கடைசி மகன் என்பதால் அவனை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். யோசேப்பின் 17வது வயதில் ஆண்டவர் ஒரு தரிசனத்தைக் கொடுத்திருந்தார். அதாவது 'ஆண்டவர் என்னை என் சகோதரர்களுக்கும் மேலாக உயர்த்தப் போகிறார்' என்பதாக. நன்மையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த யோசேப்புக்கு எல்லாமே மாறுதலாக நடக்கிறது. பொறாமைக் கொண்ட அவரது சொந்த சகோதரர்கள் வியாபாரிகளிடத்தில் அவரை விற்றதினால், எகிப்து தேசத்தின் அரசு அதிகாரி போர்த்திபார் வீட்டிற்கு அடிமையாகக் கொண்டு வரப்பட்டார். யோசேப்பு, பெரிய கோடீஸ்வரர் குடும்பத்திலிருந்து அடிமையாக எகிப்துக்கு வருகிறார்.



'ஆண்டவர் உயர்ந்த ஸ்தானத்தில் வைப்பேன் என்று தரிசனம் கொடுத்தாரே, நான் இப்பொழுது அடிமையாக வந்திருக்கிறேனே' என்று யோசேப்பு சோர்ந்து போகாமல், கர்த்தருக்குள் சந்தோஷமாக இருந்தார். தொடர்ந்து பிரச்சனைகள் வருகிறது. ஒரு பெண்ணின் மூலமாகச் செய்யப்படாத ஒரு குற்றத்தைச் சுமத்தி யோசேப்பு சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார். சங்கிலிகளால் கட்டப்பட்டு, ஜெயிலில் அடைக்கப்படுகிறார். வாழ்ந்திருக்க வேண்டிய வாலிப வயதில் ஜெயிலுக்குள் இருக்கிறார். 'என் சகோதர்கள் அடிமையாக விற்று போட்டார்களே, செய்யாதக் குற்றத்துக்காகச் சிறைக்கு வந்தேனே, என் வாழ்க்கை இப்படியே முடிந்து போகுமா' என்று நினைத்திருக்கலாம். ஆனால் தேவன் அவருக்குக் கொடுத்திருந்த வாக்கை விசுவாசித்து, 13 வருடங்கள் உபத்திரவம், பாடுகள் மத்தியில் போனாலும் யோசேப்பு சோர்ந்து போகவில்லை, முறுமுறுக்கவில்லை, ஆண்டவரை விட்டு விலகிப் போகவில்லை, ஆண்டவரை கேள்வி கேட்கவில்லை. ஏனென்றால் முடிவு நன்மையாக இருக்கும் என்று யோசேப்புக்குத் தெரியும்.

சிறையில் இருக்கும்போது எகிப்தின் இராஜா அவனை ஆளனுப்பி அழைத்து இராஜாவுக்கு முன்பாக நிறுத்தி, இராஜாவின் சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லச் சொல்கிறார். யோசேப்பு இராஜாவின் சொப்பனத்துக்கு அர்த்தத்தைச் சொன்னவுடன், 'இப்படி தேவ ஆவியைப் பெற்ற வாலிபனை நான் பார்த்தது இல்லை, நீ தான் இந்தத் தேசத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும், தேசத்தின் பஞ்ச காலத்தில் நீ தான் அதிகாரியாக இருக்க வேண்டும்' என்று எகிப்து தேசத்தின் பிரதம மந்திரியாக யோசேப்பு நியமிக்கப்பட்டார். ஆண்டவர் சொன்ன தரிசனம் நிறைவேறும், காரியம் நன்மையாக முடியும் என்று யோசேப்புக்குத் தெரியும். எந்தச் சகோதரர்கள் அடிமையாக விற்றார்களோ அவர்கள் மத்தியில், தேசத்துக்கு அதிகாரியாகத் தேவன் உயர்த்தினார்.

சென்னையில் ஒரு பெரிய அலுவலகத்தில் வேலைப் பார்த்து வந்த ஒரு சகோதரரை ஒருநாள் நான் சந்திக்கும்போது மிகவும் துக்கத்தோடு இருந்தார். 'ஏன் துக்கமாக இருக்கிறீர்கள்' என்று கேட்டேன். எனக்குப் பின்பு வந்த நபருக்குப் பதவி உயர்வு கொடுத்தார்கள். எனக்குத் தான் அந்த promotion கிடைக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்தேன், ஆனால் எனக்குப் பதிலாக அவருக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னார். ஆண்டவர் நன்மையானதே செய்வார் என்று நான் எவ்வளவோ சொல்லியும் அவர் மனதுக்கு திருப்தி ஆகவில்லை. கடைசியாக ஒரு வசனத்தைச் சொல்லி ஜெபித்து அனுப்பினேன். 2, 3 நாட்களுக்குப் பின்பு என்னைப் பார்க்க மிகவும் சந்தோஷமாக வந்தார். மிகவும் சந்தோஷமாக வருகிறீர்களே என்னவென்று கேட்டபோது, அவருக்கு Promotion கொடுத்து வடஇந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னார். ''நல்ல வேளை எனக்கு promotion கிடைக்கவில்லை, கிடைத்திருந்தால் நான் வட இந்தியாவிற்கு சென்றிருக்க வேண்டும்'' என்று சொன்னார். 2 மாதத்திற்கு பின்பு இவருக்கு promotion கொடுத்துச் சென்னையிலேயே வேலை என்பதாக அவர் சொன்னார். ஆண்டவர் நன்மையானதையே செய்வார். ஆனால் அதை நம்மால் அப்பொழுது ஏற்றுக்கொள்ள முடியாது, புரிந்து கொள்ள முடியாது.

இன்றைக்கு உங்கள் வீட்டில், வேலை ஸ்தலத்தில், வியாபாரம் செய்கிற இடத்தில், வசிக்கிற இடத்தில், பொய்யான பழி சுமத்தப்பட்டு, பொய்யான குற்றஞ் சாட்டப்படும்போது கலங்கிப் போகிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள்! முடிவு நன்மையாக இருக்கும்.

*அன்பான வாலிபர்களே!*
*நீங்கள் கூட இன்றைக்கு நான் எல்லோராலும் வெறுக்கப்பட்டு இருக்கிறேனே என்று கலங்கி நிற்கிறீர்களா? கலங்காதீர்கள்! யோசேப்பை உயர்த்தின ஆண்டவர் உங்களை உயர்த்தப் போகிறார். உங்களுடைய குடும்பத்தை உயர்த்தப் போகிறார். இன்றைக்கு நீங்கள் சிறுமைப்பட்டிருக்கலாம். ஆனால் முடிவு உயர்வு. ஆதி. 41:41ல் எகிப்தின் இராஜாவாகிய பார்வோன், "யோசேப்பு நீ தான் இந்தத் தேசத்துக்கு அதிகாரியாக இருந்து கவனிக்க வேண்டும்" என்று சொல்கிறார். உங்களையும் கர்த்தர் உயர்த்தப் போகிறார். ஆனால் பாடுகளை, அவமானங்களைச் சகிக்க வேண்டும். தரிசனத்தை விட்டு விலகாமல் தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.*
*நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்!!*

முகப்பு செய்தி: சதீஷ்



# திசையைத் தீர்மானி

வாழ்க்கையில் வெற்றியடைய யாருக்குத்தான் ஆசையில்லை. நீங்கள் வெற்றியாளராக இருக்க வேண்டுமானால், சரியான திசையில் உங்கள் வாழ்க்கைப் பயணம் இருக்க வேண்டும். இல்லையென்றால், திசை மாறிப் போன கப்பலைப் போல வாழ்க்கை வழிதப்பிப் போய் விடும். எனவே இந்த வாலிப வயதில் சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் உற்சாகமாகச் செல்லுங்கள். வெற்றி நிச்சயம் வரும். வாழ்க்கையில் அடுத்து என்ன செய்யப் போகிறோம்? என்பது பலருக்கும் இருக்கும் கேள்வி. ஒரு வேளை நீங்களும் இந்தக் கேள்வியோடு இருப்பீர்களானால் கவலைப்படாதிருங்கள் ஆண்டவர் உங்களைச் சரியான திசையில் நடத்துவார். **“நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்”** (சங்கீதம் 32:8) என்றார்.

லோத்து ஆபிரகாமிடமிருந்து பிரிந்து செல்லும்போது சரியான திசையைத் தீர்மானித்துச் செல்லவில்லை. சோதோம் கொமோரா பட்டணம் அவருடைய கண்களுக்குக் கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், செழிப்பான எகிப்து



தேசத்தைப் போலவும் இருந்தது. **“சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்”** (ஆதி. 13:13) என்று அங்கே போன பின்புதான் அவனுக்குத் தெரிந்தது. அவன் தன்னுடைய கண்களுக்கு எது சிறந்ததாகபட்டதோ அதனையே தேர்வு செய்தான். லோத்து ஒரு நிமிடம் சிந்தித்து இருப்பார் என்றால் இந்தத் தவறை செய்திருக்கமாட்டார். இதுமட்டுமின்றி ஆண்டவர் அப்பட்டணங்களை அழிக்க முற்பட்டபோது அவனையும் குடும்பத்தையும் தப்பிவிக்கும் விதமாக **“...இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்”** (ஆதி. 19:17).

ஆனால் அவனோ ஆண்டவர் சொன்ன திசையை நோக்கிச் செல்லாமல் தன் இஷ்டப்படி சென்றதால் அவனும் குடும்பத்தாரும் பெரும் பாதிப்புக்குள்ளாகினர். ‘‘மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்’’ (நீதி. 16:25). உங்களைச் சுற்றி இருக்கின்ற ஜனங்களும் நண்பர்களும் அவரவர் இஷ்டப்படியும் அவர்களுடைய பார்வைக்கு நலமான திசையில் சென்றாலும், நீங்கள் ஆண்டவரிடத்தில் கேட்டு விசாரித்துச் சரியான திசையைத் தீர்மானியுங்கள். அப்பொழுது உங்களுடைய வழிகள் உறுதிப்படும்.

நமது ஆண்டவர் இரக்கமும் மனதுருக்கமும் அன்புமுள்ளவர் என்பதை யோனாவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளலாம். யோனா செல்ல விரும்பாத இடம் நினிவே. ஆனால் கர்த்தரோ அவரை அங்கே செல்லக் கட்டளையிட்டார். ஆனால் அவரோ ஆண்டவர் சொன்ன திசையை நோக்கிச் செல்லாமல் அவர் மனதிற்கு விரும்பின திசையில் பிரயாணம் செய்ய ஆரம்பித்தார். 500 மைல் தொலைவில் உள்ள நினிவேக்குச் செல்லாமல், 2000 மைல் தொலைவிலிருந்த தர்ஷீசுக்கு புறப்பட்டுப் போனதால் பெரும் பாதிப்புகளைச் சந்திக்கிறார். நம்மில் அநேகர் ஆண்டவர் காண்பிக்கும் திசையில் செல்லாமல் அவரவர்களுக்கு இஷ்டமான திசையில் செல்வதால் பெரிய இழப்புகளும் குழப்பங்களும் உண்டாகி, வாழ்க்கை வீணாகி விடுகிறது. கர்த்தரின் வழிகளில் செல்லாமலும் அவர்மேல் நம்பிக்கை வைக்காமல் தேவனுடைய நோக்கங்களை உதாசீனம் செய்யும்போது நாம் நெருக்கப்படுகிறோம்.

**எனக்கன்பான வாலிபர்களே, இன்று நீங்கள் ஆண்டவர் காண்பிக்கும் திசையில் செல்கிறீர்களா? இல்லை அவரை அலட்சியப்படுத்தி நெருக்கத்தில் அகப்பட்டுள்ளீர்களா? சற்றே நிதானித்து ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் நன்றாய் சீர்படுத்துங்கள். இயேசுவை நம்பி அவர் காண்பிக்கும் திசையில் நீங்கள் செல்லும்போது, அவர் கரம் உங்களை நடத்துவதை உணர்வீர்கள்.**

“உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்”

**(நீதி. 3:6).**



# இது இல்ல Trendu...!

தகவல்: ஜாய்லின்

ஹலோ Friends, கடந்த மாதத்தில் ஆவியில் மாதிரியாய் இருக்க வேண்டும் என்று பார்த்தோம். இந்த மாதத்தில் விசுவாசத்தில் எப்படி மாதிரியாய் இருக்க வேண்டும் என்று பார்க்கலாம்.

## விசுவாசத்தில் மாதிரி



இயேசுவை அறியாதவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கு தடையாக அநேக காரணங்கள் இருந்தாலும், அதில் முக்கியமான காரணம் சாட்சி இல்லாமல் வாழும் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்கள் சாட்சியாக அல்லது முன்மாதிரியாக வாழ்ந்து இருந்தால் சுவிசேஷம் அறிவிக்காமலேயே அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டிருப்பார்கள். மகாத்மா காந்தி கூட ஒரு முறை பேட்டியில் எனக்குக் கிறிஸ்துவை பிடிக்கும்; ஆனால் கிறிஸ்தவர்களைப் பிடிக்காது, காரணம் கிறிஸ்தவர்கள் இயேசு போதித்தபடி நடப்பதில்லை என்று சொன்னார். மற்றுமொரு இடத்தில் ''கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் போல வாழ்ந்தால் இந்தியாவில் ஒரு இந்துக்கள் கூட இருக்கமாட்டார்கள்'' என்றும் கூறியுள்ளார். இயேசுவை அறியாதவர்களுக்கு மாத்திரம் அல்ல, விசுவாசிகளுக்கும் நாம் மாதிரிகளாய் இருக்க வேண்டும். தெசலோனிக்கேய சபை மக்கெதோனியா மற்றும் அகயாவில் உள்ள விசுவாசிகளுக்கு மாதிரிகளாய் இருந்தார்கள். அதேபோல நாமும் மாதிரிகளாய் இருக்க வேண்டும்.

நாம் விசுவாசத்தில் மாதிரிகளாய் இருக்க வேண்டும். இன்றைக்கு நம் விசுவாசத்தை பார்த்து மற்றவர்கள் விசுவாசத்தில் பெலனடைகிறார்களா? இல்லை பலவீனமடைகிறார்களா?? இன்றைக்கு எந்தச் சூழ்நிலையிலும் ஆண்டவரை சார்ந்து இருக்க வேண்டும் என்று போதிக்கிற ஊழியர்களில் சிலர் அவர்களுக்குப் பணம் தேவைப்படும்போது மற்றவரைத் தேடி போவது விசுவாசத்தில் மாதிரி அல்ல. வேதத்தில் நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைப் பார்த்து இயேசு ஆச்சரியப்பட்டார் (மத். 8:10). கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தைப் பார்த்து **“உன் விசுவாசம் பெரிது''** என்றார் (மத். 15:28). அதேபோல் ஆபிரகாம் தன்னுடைய சரீரம் செத்துப்போன போதிலும் சாராளின் கர்ப்பம் செத்துப்போன போதிலும் தேவன் எப்படியும் தனக்கு பிள்ளையைத் தருவார் என்று விசுவாசித்தான். இன்று ஆபிரகாம் நமக்கு மாதிரியாய் இருக்கிறார். இவர்கள் எல்லாரும் விசுவாசத்தில் மாதிரியாய் இருந்தாலும் நாம் எப்போதும் நமக்கு மாதிரியாய் இயேசுவை வைக்க வேண்டும். இயேசு எப்பொழுதும் பிதாவை விசுவாசித்து பிதாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நமக்கு மாதிரியை வைத்துப் போய் இருக்கிறார்.

அன்பு வாலிபர்களே! மற்றவர்கள் விசுவாசத்தில் பெலனடைகிறது போல நாம் விசுவாசத்தில் மாதிரியாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் விசுவாசத்தில் இடறி போகிற போல நாம் மாதிரியாய் இருக்கக் கூடாது. **“நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்”** (1 யோவான் 5:4) என்ற வசனத்தின்படி, நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருந்து சாத்தானை ஜெயித்து வாழும் சாட்சியுள்ள வாழ்க்கையைப் பார்த்து அநேகர் கிறிஸ்துவண்டை வர வேண்டும். எனவே இயேசுவை மாதிரியாய் வைத்து மற்றவர்களுக்கு விசுவாசத்தில் மாதிரியாய் வாழத் தீர்மானம் எடுப்போம்...!

***இயேசுவே உம்மைப் போல நானும் மற்றவர்களுக்கு விசுவாசத்தில் மாதிரியாய் இருக்க உதவி செய்யும்.***

உண்மை சம்பவம்: கமல்



# கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள்!



**கிறிஸ்துவுக்காக நிலைத்திருந்த சீஷர்கள் என்ற தலைப்பில் இந்த மாதம் சாது சுந்தர் சிங் அவர்களைக் குறித்து பார்க்க இருக்கிறோம். அவர் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ராம்பூர் என்ற இடத்தில் பிறந்தார். அவர் பெற்றோர் சீக்கிய மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். இவர்கள் கிறிஸ்தவர்களை மிகவும் எதிர்த்தனர். மிஷனெரிகள் மீது கற்களையோ சேற்றையோ எறிந்து தாக்கத் தூண்டுவர்.**

புத்தர்மீது மிகுந்த பக்தி வைராக்கியத்தில் வளர்க்கப்பட்ட சாது சுந்தர் சிங் ஒருகட்டத்தில் மிகவும் குழப்பத்துடன் மனதில் சமாதானமின்றி காணப்பட்டார். உண்மையான கடவுள் ஒருவர் உண்டு என்றால் ''உம்மை எனக்குக் காண்பியும், இரட்சிப்பிற்குரிய வழியையும் சமாதானத்தையும் நீர் எனக்குத் தர வேண்டும்'' என்று சொல்லி அவர் ஜெபிக்க ஆரம்பித்தார். அவ்வேளையில் அந்த அறையில் ஒரு பேரொளி வீசியது. அதில் அவர் இயேசு கிறிஸ்துவின் சாயலைக் கண்டார். அவர் தமது ஆணிகள் பாய்ந்த கரத்தைச் சுந்தருக்குக் காண்பித்து 'நான் உன்னுடைய இரட்சகர்' என்று சொன்னார். அப்பொழுதே சுந்தரின் இதயம் மாபெரும் மகிழ்ச்சியினால் நிரம்பியது. அவர் வாழ்க்கை முழுவதும் மாறியது.

சுந்தர் கிறிஸ்தவனாக மாறுவதற்கு எடுத்த தீர்மானத்தைக் கண்டு அவருடைய குடும்பம் முழுவதுமே அதிர்ச்சி அடைந்தனர். அதனால் சுந்தர் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டார். உண்பதற்கு உணவோ, தங்குவதற்கு உறைவிடமோ இல்லாமல் ஒரு மரத்தின் அடியில் தங்கினார். சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவர் வீட்டிற்குள் அனுமதிக்கப்பட்டார். ஆனால் வீட்டுக்கு வெளியில் வைத்து உணவு கொடுக்கப்பட்டது. என்றாலும் மனதிலே பரிபூரண மகிழ்ச்சியோடு இயேசு கிறிஸ்துவுக்காக எதையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டார். கடைசியாக விஷம் கொடுக்கப்பட்டு வீட்டிலிருந்தே துரத்தப்பட்டு நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையை அடைந்தார். என்றாலும் அவரிடம் அன்புகொண்ட ஆண்டவர் அவரை மரணப் பிடியிலிருந்து விடுவித்தார்.

சாது சுந்தர் சிங் தன்னைப் பரிபூரணமாகக் கிறிஸ்துவின் கரத்தில் அர்ப்பணித்தார். வெறும் கால்களோடும் புதிய ஏற்பாட்டோடும் தன்னை ஆட்கொண்ட கிறிஸ்துவுக்காக அவர் புறப்பட்டுச் சென்றார். **''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக. அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையப் பட்டிருக்கிறேன்''** (கலா.6:14) என்ற வசனத்தைத் தன்னுடைய வாழ்க்கையில் குறிக்கோளாக அவர் வைத்திருந்தார்.

**''என்மீது உள்ள அன்பினால் இயேசு கிறிஸ்து தம்மைத் தியாகம் பண்ணினார். அதுபோலவே நானும் இயேசு கிறிஸ்துவின்மேல் உள்ள என்னுடைய அன்பினால் என்னைத் தியாகம் செய்ய வேண்டும்''** என்று அவர் அடிக்கடி கூறுவதுண்டு. பல வேளைகளில் பலவிதமான முறைகளில் அவர் துன்பப்படுத்தப்படும்போதும், அவர் மகிழ்ச்சியோடும் பொறுமையோடும் இருப்பதைக் கண்ட அநேகர் அவருடைய நற்செய்தியை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர்.

**கிறிஸ்துவுக்காக நிலைத்திருந்த இந்த சாது சுந்தர் சிங்கைப் போல நாமும் எந்த நிலமையிலும் கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பினால் அவருக்காக வாழ்ந்திடுவோம். நம்மூலமாகவும் தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும். ஆமென்.**



# ஆசரிப்பு கூடாரம்

தகவல்: மோசஸ்

*நாம் ஒவ்வொரு மாதமும் ஆசரிப்பு கூடாரமும் அதில் உள்ள பொருட்களைப் பற்றியும் அறிந்து வருகிறோம். இந்த மாதம் ஆசரிப்புக் கூடாரத்தின் மிக முக்கியமான பணியாளர்களைக் குறித்து பார்க்கலாம். ஆசரிப்பு கூடாரத்திற்கு சாட்சி கூடாரம் என்ற பெயரும் உண்டு. ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரியர்களும், லேவியர்களும் ஊழியம் செய்தார்கள்.*

**லேவியர்கள்:** யாக்கோபின் 12 பிள்ளைகளில் மூன்றாவது மகன் பெயர் லேவி. லேவியின் சந்ததியார் லேவியர்கள் என்று அழைக்கப்பட்டனர். லேவி என்றால் 'சேருதல்' (ஆதி. 29:34) என்று பொருள். ஆகவே தான் லேவியரை இஸ்ரவேலரிடமிருந்து பிரித்துக் கர்த்தர் தம்மோடு சேர்த்துக் கொண்டார். லேவியர்கள் ஆசாரியரின் உதவியாளர்கள்.

**லேவியர்களின் தெரிந்தெடுப்பு:** (எண் 3ம் அதிகாரம்) இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, தேவன் லேவியரை, இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்துக் கொண்டார். அவர்கள் (லேவியர்கள்) என்னுடையவர்களாய் இருக்கிறார்கள்'' (எண். 3:12). லேவியின் கோத்திரத்தார் பணிவிடை செய்ய ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரரிடத்திலும் முற்றிலும் ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தார்கள்.

**லேவியர்களின் பணிகள்:**

- ஆசரிப்பு கூடாரத்தையும் பணிமுட்டுகளையும் பாதுகாத்து வந்தார்கள்.
- சாட்சியின் கூடாரத்தைச் சுற்றி லேவியர் மட்டுமே பாளயமிறங்கி, காவல் காப்பார்கள்.
- அந்நியன் சமீபத்தில் வரக் கூடாது. வந்தால் கொல்லப்படுவார்கள்.
- வனாந்தர பிரயாணத்தில் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டு சாமான்கள் எடுத்துச் சுமந்து போவதற்கு நியமிக்கப்பட்டவர்கள்.
- லேவியரில் 30 வயது முதல் 50 வயது வரையுள்ளவர்கள் மட்டுமே ஆசரிப்புக் கூடாரத்தில் பணிவிடை வேலை செய்யவும் சுமை சுமக்கவும் அனுமதிக்கப்பட்டனர்.



**லேவியின் குமாரர்கள்:** லேவியின் குமாரர் கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களின் வம்சத்தினர் காவல் காக்கிறவர்களாகவும் சுமை சுமக்கிறவர்களாகவும் இருந்தனர்.

**கெர்சோனியர்:** ஆசரிப்பு கூடாரத்தின் வாசல் மறைவு, பிரகாரம், மூடுதிரைகள் அவைகளின் வேலைக்குரிய கயிறு எனக் கூடாரத்தின் வெளிப்பகுதியில் காணப்படும் பொருட்களை இரண்டு கூடுள்ள வண்டிகளில் ஏற்றிச் சுமப்பார்கள். இவர்கள் ஆசரிப்பு கூடாரத்தின் பின் பக்கத்தில் மேற்கே தங்கி இருப்பார்கள்.

**கோகாத்தியர்:** வாசஸ்தலத்தின் தென்திசையில் பாளயமிறங்கினர். இவர்கள் சுமப்பது பெட்டியும் மேஜையும் குத்துவிளக்கும், பீடங்களும் ஆராதனைக்கு

ஏற்றப் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளும் தொங்கு திரைகள் மற்றும் அதினுடையவைகள். கோகாத் புத்திரருக்கோ வண்டிகள் ஒன்றும் கொடுக்கவில்லை. தோள்மேல் சுமப்பதே வேலையாக இருந்தது. ஆசரிப்பு கூடாரத்தில் கோகாத் புத்திரரின் பணிவிடை மகா பரிசுத்தமானவைகளுக்குரியது. பாளையத்திலிருந்து ஆசரிப்புக் கூடாரம் புறப்படும்போது ஆரோனும் அவன் குமாரரும் மட்டுமே, பரிசுத்தமானவைகளை மூட



வேண்டும். இவர்கள் பரிசுத்தமானதை மூடும்பொழுது கோகாத் புத்திரர் அதைப் பார்க்கவும் கூடாது, தொடவும் கூடாது. இதை மீறி செய்தால் அவர்கள் அழிந்து போவார்கள். கோகாத் புத்திரரில் ஆரோன் மோசே பிறந்த அம்ரோன் குடும்பம் விசேஷமானது. பாருங்க, பரிசுத்தமானதை தொடவும் கூடாது, பார்க்கவும் கூடாது. ஆனால் நாமோ பரிசுத்த ஸ்தலத்தில் இரக்கத்தைப் பெறவும், ஏற்றச் சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி. 4:16) என்று வேதம் சொல்லுகிறது.

**மெராரியர்:** இவர்கள் வாசஸ்தலத்தின் வடபக்கத்தில் பாளயமிறங்கி, வாசஸ்தலத்தில் பலகைகள், தாழ்பாள்கள், தூண்கள், பாதங்கள் அதனுடைய பணிமுட்டுகள் சுற்று பிரகாரத்தின் தூண்கள், அவைகளின் பாதங்கள் முளைகள், மற்றும் கயிறுகளைக் கூண்டுள்ள நாலு மாட்டு வண்டியில் ஏற்றிச் சுமப்பார்கள். இப்படியிருந்த நிலையில், வாசஸ்தலத்தின் அருகில் அந்நியன் வர முடியாது. இஸ்ரவேல் ஆசரிப்பு கூடாரத்தின் அருகில் கூடாரம் போட்டு தங்க முடியாது. லேவியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியாது. ஆசாரியர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போக முடியாது. பிரதான ஆசாரியருமே வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே போக முடியும். ஆனால் நாமோ, முன்னே மாம்சத்தின்படி புற ஜாதியாராயிருந்து, கிறிஸ்துவை சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்கு புறம்பானவர்களும் வாக்குத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியருமாயிருந்தோம். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் **(எபே. 2: 11-13)** என்று வேதம் சொல்லுகிறது.

## அப்படியானால் ஆசாரியர்கள் யார்?

எல்லா லேவியரும் ஆசாரியர்கள் அல்ல. அவர்களில் ஆரோனின் வம்சத்தினருக்கு மட்டுமே ஆசாரிய ஊழியம் செய்ய அனுமதி உண்டு (எண் 3:10). லேவியராகமம் என்றால் ஆசாரியனுடைய ஆசார ஆகமம் ஆகும். லேவியராகமம் என்று பெயரிட்டாலும் அந்த நூலில் லேவியரைக் குறித்து அல்ல, ஆசாரியர்களைக் குறித்தே விசேஷமாய் சொல்லப்பட்டிருக்கிறது. லேவியனுக்கு அபிஷேகம் கிடையாது. நம்மையோ தேவன் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் அபிஷேகம் செய்கிறார் (மத்தேயு 3:11). அப்படியானால் ஆசாரியர்கள் என்றால் யார்? அவர்களின் பணி என்ன? என்றெல்லாம் அடுத்த மாதம் பார்க்கலாம்...

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
காலை 7 மணிக்கு
YouTube YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547
LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 29th JUNE
Time: 3:00 PM - 5:00 pm
IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

வரலாறு: சுதர்சன்

# மீண்டும் துளிர்த்த அத்திமரம்

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பு நண்பர்களுக்கு வாழ்த்துக்கள். "மீண்டும் துளிர்த்த அத்திமரம்" என்ற இந்தச் சரித்திரத்தின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.**

இந்த மாதத்தில் மீண்டும் உருவான இஸ்ரவேல் தேசத்தைக் குறித்து பார்க்க இருக்கிறோம். அதாவது மீண்டும் துளிர்த்த அத்திமரம் என்பதை குறித்து தெளிவாகக் காணலாம்.

உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட யூதர்கள் அதாவது இஸ்ரவேலர்கள் பல தேசங்களில் அகதிகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் சொந்த தேசத்திற்கு செல்ல வேண்டும் என்ற வைராக்கியத்தோடு வாழ்ந்தார்கள். இவர்கள் வாழ்ந்த தேசங்களில் எல்லாம் யூதர்கள் அதாவது இஸ்ரவேலர்கள் மிகவும் நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய இருதயத்தின் எண்ணமெல்லாம் ‘மீண்டும் எங்கள் தேசத்தில் நாங்கள் வாழ வேண்டும்’ என்பதே. இதற்காக மிகவும் உழைத்தார்கள்.

**இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன். என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன், நீங்கள் உயிரடைவீர்கள், நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.** (எசேக்கியேல் 37:12-14) உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் சொந்த தேசத்திற்கு வருவார்கள் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.



இந்த நிலையில் 1897ம் வருடத்தில் சீயோனிஸ்ட் என்ற இயக்கம் இஸ்ரவேலர்களால் துவங்கப்பட்டது. இந்த இயக்கத்தின் நோக்கம் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலர்களை ஒன்று சேர்ப்பது. அதாவது சொந்த தேசத்திற்கு கூட்டி சேர்ப்பது. இதன் விளைவாக 1901ம் ஆண்டில் யூதர்களின் தேசிய நிதி (Jewish National fund) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் மூலம் உலகம் முழுவதிலும் பரவி இருந்த யூதர்களிடமிருந்து நிதி திரட்டப்பட்டு யூதர்களுக்காக

இடம் வாங்கப்பட்டு 1909 ஆம் ஆண்டு இஸ்ரவேல் தேசத்தில் உள்ள டெல் அவீவ் பட்டணத்தில் மீண்டும் முதல் யூத பட்டணம் உருவானது. இந்தக் காலகட்டத்தில் உலகம் முழுவதும் சுமார் ஒரு கோடியே 70 லட்சம் யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். இஸ்ரவேலரின் தொகை அதிகரித்துக் கொண்டே இருந்தது. இரண்டாம் உலகப் போரின் காலகட்டத்தில் சுமார் 60 லட்சம் யூதர்கள் ஜெர்மனியின் தலைவர் ஹிட்லரால் கொல்லப்பட்டனர். இது போன்று பல இன்னல்களையும் உபத்திரவங்களையும் உலகமெங்கும் அகதிகளாய் வாழ்ந்த யூதர்கள் அதாவது இஸ்ரவேலர்கள் சந்தித்து வந்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் 1914 ஆம் ஆண்டு ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் துவங்கி அது உலக மகா யுத்தமாக மாறினது. இதனால் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு எந்தப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படவில்லை. பிரிட்டிஷ் ராணுவத்தின் கப்பல்களில் உள்ள பீரங்கிகளுக்கு அசிட்டோன் என்ற வேதிப்பொருள் ஐரோப்பிய நாடுகளில் உள்ள மரங்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. அசிட்டோன் இல்லாத குறைபாட்டால் பிரிட்டிஷ் வீழ்ச்சி அடையும் நிலை வந்தது.



அந்தச் சமயத்தில் டாக்டர் கெய்ம் வைஸ்மேன் zz என்ற யூத விஞ்ஞானி இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் நகரில் பேராசிரியராகப் பணியாற்றினார். இந்த நேரத்தில் அசிட்டோன் என்ற வேதிப்பொருளைச் சோழத்தில் (Corn) இருந்து தயாரிக்கலாம் என்பதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தார். பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் யூத விஞ்ஞானியிடம் அசிட்டோன் மருந்து பெரிய அளவில் தயாரித்து தர முடியுமா என்று கேட்க அவரும் சோளத்திலிருந்து அந்த மருந்தைப் பெரிய அளவில் தயாரித்துக் கொடுத்தார். இதனிமித்தம் பிரிட்டிஷார் யுத்தத்தில் ஜெயித்தார்கள்.

அப்பொழுது இங்கிலாந்தின் பிரதம அமைச்சராக இருந்த லாயிஸ்ட் ஜார்ஜ் அவர்களும் வெளிநாட்டு செயலராயிருந்த ஜேம்ஸ் பால்போர் அவர்களும் நாம் ஜெயிப்பதற்கு காரணமாய் இருந்த யூத விஞ்ஞானிக்குப் பெரிய வெகுமதி கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள். ஆனால் யூத விஞ்ஞானி வெகுமதி வாங்க மறுப்பு தெரிவித்து ஒரு கோரிக்கையை அவர்களிடம் கேட்டார். ''உலகம் எங்கும் அகதிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கிற என் இன மக்களாகிய யூதர்கள் பாலஸ்தீன தேசத்தில் (அந்த நாட்களில் உலக வரைபடத்தில் இல்லாத இஸ்ரவேல் தேசத்தில்) குடியேற அனுமதி வேண்டும்'' என்று கேட்டார்.




அவர் கேட்டுக்கொண்டபடியே அமைச்சரவையின் ஒப்புதலின்படி வெளிநாட்டு செயலாளர் ஜேம்ஸ் பால்போர் அவர்கள் ''யூதர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அங்கிருந்து பாலஸ்தீன தேசத்தில் வந்து தங்கிக் கொள்வதற்கும், சொந்த வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கும் குடியிருப்பதற்கும் வாழ்வாதாரங்களை அமைத்துக் கொள்வதற்கும் பிரிட்டனுக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை என்று 9/12/1917ல் ஒரு பிரகடனம் வெளியிட்டார். இந்தக் காலகட்டத்தில் பாலஸ்தீன தேசம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பின் 1918க்கும் 1948க்கும் இடையில் பாலஸ்தீன தேசத்திற்கு குடியேறிய யூதர்களின் எண்ணிக்கை 5,65,000ஆக உயர்ந்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம், பாலஸ்தீனத்தில் குடியேறிய யூத மக்களை 1920இல்



THE PALESTINE POST

CARL MARX

STATE OF ISRAEL IS BORN

The first independent Jewish State in 19 centuries was born in Tel Aviv as the British Mandate over Palestine came to an end at midnight on Friday, and it was immediately subjected to the test of fire. As "Medinat Yisrael" (State of Israel) was proclaimed, the battle for Jerusalem raged, with most of the city falling to the Jews. At the same time, President Truman announced that the United States would accord recognition to the new State. A few hours later, Palestine was invaded by Moslem armies from the south, east and north, and Tel Aviv was raided from the air. On Friday the United Nations Special Assembly adjourned after adopting a resolution to appoint a mediator but without taking any action on the Partition Resolution of November 29.

Yesterday the battle for the Jerusalem-Tel Aviv road was still under way, and two Arab villages were taken. In the north, Acre town was captured, and the Jewish Army consolidated its positions in Western Galilee.

Most Crowded Hours in Palestine's History

JEWS TAKE OVER SECURITY ZONES

Egyptian Air Force Spitfires Bomb Tel Aviv; One Shot Down

U.S. RECOGNIZES JEWISH STATE

Proclamation by Head Of Government

2 Columns Cross Southern Border

Etzion Settlers Taken P.O.W.

Special Assembly Adjourns

தங்களுக்கு என்று ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள அனுமதி அளித்தது. 1947-இல் பாலஸ்தீனர்களுக்கும் யூதர்களுக்கும் பாலஸ்தீன தேசத்தைப் பகிர்ந்து கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. 1948 மே 14ஆம் தேதி பிரிட்டிஷ் படைகள் பாலஸ்தீன தேசத்திலிருந்து வெளியேறினார்கள். இஸ்ரவேல் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

**அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டு வருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்ளுவேன்; உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியில் உள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** (செப்பனியா 3:20) என்று கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தின்படி, 1948ம் ஆண்ட மே மாதம் 14-ஆம் தேதியில், சுமார் 1900 ஆண்டுகள் உலக வரைபடத்தில் இல்லாத ஒரு தேசம் மீண்டும் உருவானது. யூதர்கள் இந்த நாளைத் தங்களுடைய சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

**அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள், அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்** (மத்தேயு 24:32).

## அத்தி மரம் - இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கும் இளங்கிளை - ராஜாவைக் குறிக்கும்

அத்தி மரம் துளிர் விட்டது அதாவது இஸ்ரவேல் தேசம் மீண்டும் உருவானது. இளங்கிளை அதாவது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா நியமிக்கப்பட்டார் (முதல் பிரதமர் டேவிட் பென் குரின்). எப்பொழுது இஸ்ரவேல் தேசம் மீண்டும் உருவாகின்றதோ அப்பொழுது நான் வாசலருகே வந்து விட்டேன் என்று நம் இரட்சகர் இயேசு சொன்ன அடையாளங்கள் நிறைவேறிவிட்டன. இந்த சம்பவங்களையும் வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இயேசுவின் வருகை மிகவும் சமீபம்.

கிபி 70ஆம் நூற்றாண்டில் எருசலேம் தேவாலயமும் எருசலேம் பட்டணமும் தீக்கிரையாக்கப்பட்டது.



இஸ்ரவேல் தேசம் உருவாகிவிட்டது. ஆனால் எருசலேம் பட்டணம் இஸ்ரவேலுக்கு சொந்தமாகவில்லை. இந்த சூழ்நிலையில் 1967ம் ஆண்டு இஸ்ரவேலர் எருசலேமை கைப்பற்றினர்.

ஆனால் எருசலேம் தலைநகராக மாற்றப்படவில்லை. ஆனால் வேதம் சொல்லுகிறது. **எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்** (சகரியா 12:6).

இந்த வசனத்தின்படி எருசலேம் இஸ்ரவேலின் தலைநகராக மாற்றப்பட வேண்டும் ஆனால் மாற்றப்படாமல் இருந்தது. 2018 ஆம் ஆண்டு அமெரிக்க பிரதமர் டொனால்ட்



டிரம்ப் அவர்களால் எருசலேம் மீண்டும் இஸ்ரவேலின் தலைநகராக அறிவிக்கப்பட்டது. இஸ்ரவேல் தேசம் சுதந்திரம் அடைந்து 70 வருடங்களுக்குப் பிறகு எருசலேம் தன் ஸ்தானத்தில் உயர்த்தப்பட்டது.

**அன்பு நண்பர்களே கர்த்தருடைய வார்த்தை எவ்வளவு துல்லியமாக நிறைவேறுகிறது என்பதற்கு கர்த்தருடைய தேசம் அதாவது இஸ்ரவேல் தேசம் அதாவது மீண்டும் துளிர்த்த அத்திமரம் நமக்கு அடையாளமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. வாசல் அருகே வந்த இயேசுவை வரவேற்க ஆயத்தமாவோம்; மற்றவர்களை ஆயத்தப்படுத்துவோம்.**

**மாரநாதா இயேசு வருகிறார்.**

### எருசலேம் பட்டணம்

- *2 முறை அழித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.*
- *23 தடவை முற்றுகையிடப்பட்டது.*
- *52 தடவை தாக்குதலுக்கு உள்ளானது.*
- *44 தடவை கைப்பற்றப்பட்டது.*

# வாலிபர்களுக்கான
# எழுப்புதல் கூடுகை

## திண்டுக்கல் மாவட்டத்தில்... 8 தாலூகாவிலும் ஒரே நாளில்

நாள்: ஜூன் 7, சனிக்கிழமை
(அரசு விடுமுறை)

நேரம்: காலை 9 மணிமுதல்
மாலை 4 மணிவரை



**திண்டுக்கல்லில்...**
**சகோ. சாம் ஜெபராஜ்**
சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயம்,
டட்லி பள்ளி அருகில், திண்டுக்கல்.



**ஒட்டன்சத்திரத்தில்..**
**சகோ. கார்த்தி கமாலியேல்**
H.J மஹால், தாராபுரம் ரோடு,
ஒட்டன்சத்திரம்,



**ஆத்தூரில்...**
**பாஸ்டர் லூக்காஸ் சேகர்**
சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயம்,
டட்லி பள்ளி அருகில், திண்டுக்கல்.



**நிலக்கோட்டையில்...**
**சகோ. ஞானேஷ்**
துரை புஷ்பம் மஹால், கணவாய்பட்டி
ரோடு, அரசு மருத்துவமனை எதிரில்,
வத்தலக்குண்டு.



**கொடைக்கானலில்...**
**சகோ. டேவிட் சாம் ஜாய்சன்**
CSI கிறிஸ்து அரசர் ஆலயம்
(டவுன்) கொடைக்கானல்



**பழனியில்...**
**சகோ. சாம் மோசஸ்**
பிளஸ்ஸட் ஹோப் மிஷன் திருச்சபை
117 R. F ரோடு, பழனி.



**நத்தத்தில்...**
**சகோ. அவினாஷ்**
அட்வென்ட் கிறிஸ்டியன் சர்ச்,
இந்திரா நகர்
இச்சிமரம் பேருந்து நிறுத்தம், நத்தம்.



**குஜிலியம்பாறையில்...**
**சகோ. சதீஷ் குமார்**
St. John Believers Eastern Church,
Bethel Nagar, Karaikali Salai.

தொடர்புக்கு : 63823 92446 / 99441 05044 / 90434 22612



ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு

## ஜூன் 2025

## ஜெபக்குறிப்புகள்!

1 மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் பணி புரியும் 6.5 லட்சம் பேரும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

2 மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் தரமான மருந்துகளை உற்பத்தி செய்ய ஜெபிப்போம்.

3 தரமற்ற மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அரசாங்கத்தால் தடை செய்யப்பட ஜெபிப்போம்.



4 நம் தேசத்தில் உள்ள 3.4 கோடி மீனவர்களின் இரட்சிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

5 நம் தேசத்தின் மீனவர்களின் கையின் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படவும், வாழ்வாதாரம் உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.

6 மீனவ குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் படிப்பில் உயர்த்தப்படவும், நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.



7 நம் தேசத்தின் இளம் வாலிபர் மற்றும் வாலிபர்கள் சாலை விபத்துகளிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

8 சாலை விபத்துகளின் மூலம் இரத்தம் சிந்த போராடும் சாத்தானின் தந்திரங்கள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

9 மது அருந்திக்கொண்டு அதி வேகமாக வாகனங்களை ஓட்டுகிறவர்களின் உரிமம் ரத்து செய்ய அரசு ஆவனச் செய்ய ஜெபிப்போம்.




10 இந்தியாவில் உள்ள 65 கோடி பெண்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

11 எல்லாவித தீங்குகளிலிருந்தும் பெண்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

12 பெண்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

13 உலக அளவில் இந்தியாவில் 30% பணம் பரிவர்த்தனை இணையத்தின் மூலம் நடைபெறுவதால் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

14 இணையத்தின் மூலம் ஜனங்களை ஏமாற்றி வரும் மாஃபியாக்கள் கண்டுபிடிக்கப்படவும் அவர்கள் முடக்கப்படவும் ஜெபிப்போம்.

15 இணையத்தின் மூலம் ஜனங்களின் தகவல் மற்றும் பணம் திருடப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.





16 புவி வெப்பமயமாகுதலினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து புயல், வெள்ளம் மற்றும் காட்டுத்தீ ஜனங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

17 புவி வெப்பமயமாகுதலினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் தீமைகளைக் குறித்த விழிப்புணர்வு ஜனங்கள் மத்தியில் உண்டாக ஜெபிப்போம்.

18 இந்தியாவில் காற்று மாசு ஏற்படாமல் பாதுகாக்கப்படவும், அதிக மாசு வெளிப்படுத்தும் தொழிற்சாலைகள்மீது அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.



19 காற்று மாசினால் ஏற்படும் நோய்கள் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து ஜனங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

20 காற்று மாசினால் பாதிக்கப்படும் நோயாளிகளின் சுகத்திற்காக ஜெபிப்போம்.

21 மனித உயிர்களின் மதிப்பை உணராமல் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யும் மனிதர்களின் இருதயம் மாற்றப்பட ஜெபிப்போம்.

22 அதிக இலாபம், குறைந்த செலவில் கலப்பட பொருட்கள் தயாரிப்பவர்களுடன் இணைந்து செயல்படும் அதிகாரிகள் அரசியல் தலைவர்களைத் தேவன் சந்திக்கும்படி ஜெபிப்போம்.



23 புதிய கல்வி ஆண்டிற்குள் நுழைந்திருக்கும் கோடிக்கணக்கான மாணவ மாணவியர்களின் படிப்பைத் தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபிப்போம்.

24 எல்லா மாணவ மாணவியர்களுக்கும் நல்ல பாதுகாப்பு, உடல் சுகம் மற்றும் ஆரோக்கியம் உண்டாக ஜெபிப்போம்.

25 பள்ளிகளில் நல்ல கால சூழ்நிலைகள் உண்டாகவும், மாணவ மாணவியர் விபத்துகளுக்கு விலக்கிப் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

26 இந்திய துறைமுகங்களின் மீது தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபிப்போம்.

27 துறைமுகத்தின் வழியாகக் கடத்தப்படும் போதைப்பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்கள் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

28 துறைமுகங்களில் சட்ட விரோத குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க ஜெபிப்போம்.

29 இந்தியாவில் கொள்ளை சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.




30 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மனம் திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

31 தங்கள் பொருள், பணத்தை இழந்தவர்களுக்கு அது திரும்பக் Zகிடைக்கப்பெற ஜெபிப்போம்.

Seeds of Revival

# எழுப்புதலின் விதைகள்!




**கடந்த மாதம் அடோனீராம் ஜட்சன் என்ற மிஷனெரி பர்மாவில் 63 ஆலயங்களை நிறுவி, 163 அருட்பணியாளர்கள் மற்றும் ஊழியர்களை உருவாக்கினது மட்டுமின்றி, 7000க்கும் மேற்பட்ட பர்மா மக்களை கிறிஸ்துவின் பக்கம் கொண்டு வந்த அவருடைய மிஷனெரி வாழ்க்கையைக் குறித்துப் பார்த்தோம். இந்த மாதம் ஜேம்ஸ் சால்மர்ஸ் என்ற மிஷனெரியைக் குறித்துப் பார்க்க இருக்கிறோம்.**







**ஜேம்ஸ் சால்மர்ஸ்** ஸ்காட்லாந்தின் ஆர்கில்லில் உள்ள ஆர்ட்ரிஷைய்க் கிராமத்தில் 1841ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி கல் சிற்ப ஆசாரியருக்கு ஒரே மகனாகப் பிறந்தார். ஜேம்ஸின் 7வது வயதில் தன் குடும்பம் இன்வெராரேக்கு குடிபெயர்ந்து, அங்குள்ள பள்ளியில் தனது படிப்பைத் தொடர்ந்தார். 13வது வயதில் சுமார் ஒரு வருடம் இலக்கணப் பள்ளிக்குச் சென்றார். பின்னர் அவர் இன்வெராரேயில் உள்ள ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் பணிபுரிந்தார். 18 வயதில் தனது ஊரில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் அன்பை அறிந்து, தமது வாழ்க்கையை மிஷனெரியாக அர்ப்பணித்தார். தனது பட்டப்படிப்பை முடித்து 26 வயதில் லண்டன் மிஷனெரி சங்கத்தில் இணைந்தார்.

அக்டோபர் 17, 1865 அன்று அவர் ஜேன் ஹெர்கஸை மணந்தார், இரண்டு நாட்களுக்குப் பிறகு கிறிஸ்தவ ஊழியத்திற்காக தெற்கு பசிபிக் தீவான ''ரரோடோங்கா (Rarotonga) என்ற தீவிற்கு மிஷனெரியாகச் சென்றார். கிறிஸ்துவை அறியாத ''ரரோடோங்கா'' தீவில் வாழ்ந்த பழங்குடி மக்களின் மொழியை வெகு விரைவில் கற்று, அந்த மொழியிலே கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு அறிவித்தார். அந்தத் தீவில் 10 வருடம் மிஷனெரி பணி செய்து இருளின் ஆதிக்கத்தில் இருந்த மக்களை மெய்யான ஒளியாகிய இயேசுவினிடத்தில் சேர்த்தார். இங்கு

அவர் பல இன்னல்களையும், வெற்றிகளையும் சந்தித்துள்ளார். பின்பு 1877ம் வருடம் தமது 36ம் வயதில் ஆஸ்திரேலியாவுக்கு மேல் வடபகுதியில் அமைந்திருக்கும் தீவு நாடான ''நியு கினி''க்கு **(New Guinea)** தனது மனைவியோடு சென்றார் ஜேம்ஸ் சால்மர்ஸ். அந்த தீவுகளில் வசித்த மக்கள் மனித மாமிசம் உண்பவர்களாக இருந்தனர். நாகரீக மனிதனால் புரிந்துகொள்ள முடியாத பயங்கரங்கள் மற்றும் மனித சீரழிவுகளால் அந்த தீவு நிறைந்து இருந்தது. ஆபத்து மிகுந்த அந்த மக்களுக்கு சுவிசேஷம் சொல்ல போகும்போது தமது கையில் எந்த விதமான ஆயுதங்களையும் அவர் எடுத்து செல்ல மாட்டார். ஏனென்றால் கையில் ஆயுதங்களோடு சென்றால் வெள்ளை மனிதன் நம்மைத் தாக்க வந்திருக்கிறான் என்று சொல்லி ஓடுவார்கள். இல்லையென்றால் தாக்கத் தொடங்குவார்கள். ஆபத்து நிறைந்த பழங்குடி மக்களின் மேல் கரிசனை கொண்டவராய் கிறிஸ்துவின் அன்பை அநேகருக்கு அறிவித்துக் கொண்டிருந்தார். 105க்கும் அதிகமான கிராம தீவுகளுக்குச் சென்று கிறிஸ்துவை அறிவித்தார். 90 கிராம தீவுகளில் முதலாவது சென்ற வெள்ளை மனிதனும் இவரே. இயேசுவின் அன்பை எடுத்து சென்றவரும் இவரே ஆவார்.

ஒருநாள் ''கோரிபாரி' என்ற தீவிற்கு படகில் சென்றிருந்த ஜேம்ஸ் சால்மர்ஸை அத்தீவின் பழங்குடி மக்கள் சூழ்ந்துக் கொள்ளவே, படகை விட்டு அவர் இறங்காமல் நாளை வருவதாக கூறி தனது பகுதிக்கு வந்தார். அடுத்த நாள் 1901ம் வருடம் ஏப்ரல் 8ம் தேதி ஈஸ்டர் ஞாயிறு ஆராதனைகளை முடித்து விட்டு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியை அறிவிக்க ஆபத்து நிறைந்த ''கோரிபாரி'' தீவிற்கு மீண்டும் ஒலிவர் டோம்கின்ஸ் **(Oliver Tomkins)** என்ற மிஷனெரியுடன் சென்றார்.

இவர்களது வருகையால் மிகவும் மகிழ்ந்த அத்தீவின் பழங்குடி மக்கள் இருவரையும் உற்சாக வரவேற்புடன், ''தூபு'' **(Dubu)** என்று அழைக்கப்படும் கேளிக்கை குடிசைக்கு அழைத்துச் சென்றனர். அந்த இடத்தில் மனிதர்களை சாகும் வரை சண்டையிட வைத்து, பின்னர் அவர்களை பலியாக்கி உணவாக உண்பார்கள். இதை அறிந்திராத ஜேம்ஸ் சால்மர்சும், ஒலிவர் டோம்கின்சும் கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு அறிவித்த வண்ணமாக ''தூபு'' என்ற குடிசைக்கு சென்றனர். மரத்தினால் ஆன விக் கிரகங்களைச் சுற்றிலும் அநேக மனித மண்டை ஓடுகள் குவிக்கப்பட்டிருந்தன. இருவரும் அதைப்பார்த்துக் கொண்டிருந்த போதே, எந்தவிதமான எச்சரிப்பும் இல்லாமல் அந்த பழங்குடி மக்கள் அவர்களைத் தாக்கத் தொடங்கினர். சில நிமிடங்களில் அவர்களது உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு, அருகில் கொதித்துக் கொண்டிருந்த குழம்பில் போடப்பட்டது. ஜேம்ஸ் சால்மர்சும், ஒலிவர் டோம்கின்சும், இயேசு உயிர்த்தெழுந்த அந்த ஈஸ்டர் நாளில், இயேசுவை அறிவித்துக்கொண்டே அந்த பழங்குடி மக்களுக்கு உணவாக மாறினர். ஜேம்ஸ் சால்மர்ஸ் மற்றும் ஒலிவர் டோம்கின்சின் உடல்கள் விதையாகவும், அந்த மக்களுக்கு உணவாகவும் மாறியதை அறிந்து அநேக மிஷனெரிகள் ''நியு கினி'' தீவை நோக்கி சென்று இயேசுவின் அன்பை அறிவித்தனர். அநேக மக்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

அதன் விளைவு, 7 கோடிக்கும் அதிமான மக்கள் வாழும் அந்த தீவில், இன்றைக்கு 96% பேர் கிறிஸ்தவர்களாக மாறியுள்ளனர். **"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்"** (யோவான் 12: 24) என்ற இந்த உவமை மிக எளிதான ஆனால் மிக ஆழமான உண்மைகளைக் கூறும் உவமை. ஜேம்ஸ் சால்மர்ஸ் அவர்களின் அர்ப்பணிப்பின் விளைவாக, அநேக மக்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு 7 கோடிக்கும் அதிமான மக்கள் வாழும் அந்தத் தீவில், இன்றைக்கு 96% மக்கள் கிறிஸ்தவர்களாக மாறி அந்த இடம் பெரிய மாற்றத்தை கண்டுள்ளது.

**அன்பான வாலிபர்களே இன்றைக்கு உங்களுக்காக தீவுகள், பட்டணங்கள், கிராமங்கள், காத்துக் கொண்டிருக்கின்றன. நீங்கள் உங்களை அவர் கையில் அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது உங்களை கொண்டு ஆண்டவர் பெரிதான காரியங்களை செய்து முடிப்பார்...!**



தகவல்: எப்சிபா

# கிறிஸ்தவம்

## அன்றும் இன்றும்

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்னர் போக்குவரத்து, தொழில்நுட்ப வசதிகள் இல்லாத அக்காலத்திலேயே மிக வேகமாக நற்செய்தி அநேகரை சென்றடைந்தது. ஆனால் நாளடைவில் தொய்ந்து போனது ஏன் என என்றாவது யோசித்திருக்கிறாயா?




"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத்தேயு 28:18-20).

''புறப்பட்டுப் போங்கள்'' என்கின்ற வார்த்தையின்படி இயேசுவின் சீடர்கள் அனைவரும் புறப்பட்டுப் போய் அநேகரை சீஷராக்கினர், சபைகளைக் கட்டி எழுப்பினர். அப்படி எழுப்பப்பட்ட சபைகளைத் துன்புறுத்தின சவுலும் கூடப் பின் நாட்களில் பவுல் மூலமாய் கட்டி எழுப்பின சபைகள், ஊழியர்கள் அநேகம்.

18, 19 ஆம் நூற்றாண்டு சபைகளில் மிஷனெரிகளாக ஊழியர்களாகச் செல்ல விரும்புவோருக்கான "altar call" கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு எழுப்புதல் கூட்டத்தின் முடிவிலும் எழும்பிய ஊழியர்கள் அநேகம். அவர்கள் மூலம் தேசங்கள் அசைக்கப்பட்டன.

இன்று சபையில் அநேக ஆத்துமாக்கள் இருப்பதாக மார்தட்டிக் கொள்கிறோம், ஆனால் நமது சபைகளிலிருந்து எழும்பிய ஊழியர்கள் எத்தனை பேர் என்பது சிந்திக்க வேண்டிய காரியம். 25, 35 வருட விசுவாசிகள் கூட விசுவாசிகளாகவே தங்கள் வாழ்வை முடிக்கின்றனர்.

**புறப்பட்டுப் போக வேண்டிய நாம்**

**தூரப்பட்டு போனதேனோ?**

**இந்நிலை தீருமா?**

**தீ(ய)நிலை மாறுமா?**

**இந்தியாவில் இன்னும் சந்திக்கப்படாத பட்டணங்கள், கிராமங்கள், தெருக்கள், சந்துக்கள் எத்தனை, எத்தனை?**

**தம்பி, தங்காய் அத்தெருக்களில் ஒன்றை சந்திக்க தீர்மானிப்பாயா?**

**அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்.** (மத்தேயு 9:37)

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பேர்ணாம்பட், சேலம் மாவட்டம் இளம்பிள்ளை, சித்தூர், மும்பை, அருப்புக்கோட்டை, திருமங்கலம், கூடல்நகர் ஆகிய இடங்களில் வாலிபர் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 1190 வாலிபர்கள் கலந்து கொண்டார்கள். சகோ. சாம் ஜெபராஜ், சகோ. அவினாஷ், சகோ. சதீஷ் குமார் ஆகியோரை தேவன் பயன்படுத்தினார். வந்திருந்த வாலிபர்களை தேவன் அபிஷேகித்து வல்லமைப்படுத்தி அனுப்பினார். தேவனுக்கே மகிமை!




சாதனை: சுமா

# கனவுகள் உயர்ந்தால், சிகரங்கள் வசப்படும்!




அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! நாம் மாதாமாதம் பார்த்துக் கொண்டிருக்கும் அனைத்து சாதனையாளர்களும் தங்களுடைய இலட்சியத்தை அடைய வெறும் கனவு மட்டும் கண்டுக்கொண்டு 'என்னால் சாதிக்க முடியும்' என்று சொல்லி ஜெயித்தவர்கள் அல்ல. மாறாகத் தங்களுடைய கனவை நிறைவேற்ற இரவு பகல் பாராமல் உழைத்ததின் விளைவாக இன்று உலகம் கண்டு வியக்கும் சாதனையாளர்களாக உள்ளனர். இதைபோலக் கனவு + உழைப்பு + விடாமுயற்சியால் வெற்றிக்கண்ட சாதனைப் பெண்ணின் வாழ்க்கை உங்கள் முன்...



தமிழ்நாட்டில் உள்ள விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் முத்தமிழ் செல்வி. தன்னுடைய கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு ஜப்பான் மொழியைக் கற்றுக் கொண்டார். பின்பு ஒரு corporate நிறுவனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிந்தார். வாழ்க்கை சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருந்தது. முத்தமிழ் செல்வி கொரோனா காலத்தில் தான் செய்துக் கொண்டிருந்த வேலையை விட்டு விலகினார். இந்த உலகில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியபோது, எவரெஸ்டில் ஏறிச் சாதனைபுரிய வேண்டும் என்ற எண்ணம் வந்தது. இந்த எண்ணம் உடனடியாக வரவில்லை. சிறுவயதில் இருந்தே முத்தமிழ்செல்விக்கு மலையேறப் பிடிக்கும்.

தன் எண்ணத்தை வெற்றியாக்க உடனடியாக முயற்சியில் ஈடுபட தொடங்கினார். 2021ல் ஸ்ரீபெரும்புதூர் மலையில் கண்ணைக் கட்டிக்கொண்டு 155 அடி உயரத்தை 58 வினாடியில் இறங்கி உலக சாதனை செய்தார். பிறகு



ஹிமாச்சல் குலுமணாலியில் உள்ள ஒரு மலையிலிருந்து 165 அடி உயரத்தை 55 வினாடியில் கண்ணைக் கட்டிக்கொண்டு இறங்கி சாதனைப் படைத்தார். தன்னுடைய கனவான எவரெஸ்டில் ஏற முறையாகப் பயிற்சியில் ஈடுபட தொடங்கினார்.

என்னால் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முடியவில்லை என்று திரும்பி வந்தால், **'அதற்குத் தான் சொன்னோம், பொண்ணுக்கு இதெல்லாம் தேவையா'** என்று எளிதாகச் சொல்லி இருப்பார்கள். இந்தப் பேச்சுக்கு நாம் ஆளாகக் கூடாது என்று கடினமாக உழைத்தார். இதைக் கேள்விப்பட்ட அநேகர் எதிர்மறையாகக் கூறினர். ஆனால் அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல், உயிருக்குப் பயந்தால் சாதிக்க முடியாது என்று எண்ணி, 2023 மே 24ல் எவரெஸ்ட் மலையிலும், அதே வருடம் ஜூலை 21ல் ஐரோப்பா கண்டத்தின் மவுண்ட் எல்ப்ரஸ் (5642 மீ) மலையை ஏறினார். பிறகு அடுத்தடுத்து ஆறு கண்டங்களில் உள்ள ஆறு பெரிய மலைகளை ஏறிச் சாதனைப் புரிந்தார்.



**இதை வாசிக்கும் வாலிபர்களே! நாம் எடுக்கும் முயற்சியைத் தொடக்கத்தில் அநேகர் எதிர்க்கத்தான் செய்வார்கள். ஆனால் வெற்றிக் கண்டவுடன் "உன்னால் சாதிக்க முடியும் என்று எனக்கு அப்பொழுதே தெரியும்" என்று சொல்வார்கள். உலகம் பலவிதமாகப் பேசும். ஆனால் உங்கள் இலட்சியத்தில் கண்ணோக்கமாக இருந்தால் உலகம் உங்கள் பின்னால்...!**



## பெற்றோர் கவனிக்க...





மாணவர்களின் மனநிலையைப் புரிந்து பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இணக்கமான உறவில் இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் நண்பர்களைப் போல பழக வேண்டும். தினமும் அவர்களின் செயல்களைக் கவனியுங்கள்.

பிள்ளைகளை எப்பொழுதும் படிப்படி என்று அழுத்தம் கொடுக்க வேண்டாம். பிள்ளைகளுக்கு எந்த செயலில் ஆர்வம் இருக்கிறது என தெரிந்து கொண்டு, அதில் ஆர்வம் காட்ட உற்சாகப்படுத்துங்கள்.

பிள்ளைகளின் ஆடை விஷயத்தில் பெற்றோர்கள் தனி கவனம் செலுத்த வேண்டும்.



பள்ளிக்கு அடிக்கடி சென்று பிள்ளைகளின் படிப்பு மற்றும் பழக்கவழக்கங்களை தெரிந்து கொள்வது நல்லது.

ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் பிள்ளைகளிடம் அன்பாக பேசி அதை தெரிந்துகொள்ள முயற்சியுங்கள் .



குறிப்பாக பெண் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர்கள் முழு கவனம் செலுத்த வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் தயங்காமல் சொல்லும் அளவிற்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும்.

10, 12 வகுப்பு செல்லும் மாணவர்கள் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 2 மணி நேரமாவது படிப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுங்கள்.

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## *EVERY 1st SUNDAY (1st June)*

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## *EVERY 2nd SATURDAY (14th June)*

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## *EVERY 2nd SUNDAY (8th June)*

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre, 16B Naveen Nest Apartment,Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Grace Auto 1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

*EVERY 3rd SATURDAY (21st June)*

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

*EVERY 3rd SUNDAY (15th June)*

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur. 9489775075 |
8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing, Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kottupalayam
Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

*EVERY 4th SUNDAY (22nd Junezz)*

THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

MUMBAI-MALAD (4PM – 6PM)
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315

THISAYANVILAI (2:30 PM TO 5:30 PM)
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41,
K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**



நிகழ்வு: காலேப்

# நான் ஒரு ஜெப வீரன்

என் அன்பு தம்பி தங்கச்சி, விடுமுறையை முடித்துப் பள்ளிகளுக்குச் செல்ல ஆரம்பித்திருப்பீர்கள். இந்தப் புதிய கல்வியாண்டிற்குள் சென்றிருக்கும் மாணவ செல்வங்களுக்கு எனது அன்பின் நல்வாழ்த்துக்கள்! ஒவ்வொரு மாதமும் நான் ஒரு ஜெப வீரன் என்ற தலைப்பில் பலவிதமான ஜெபங்களைக் குறித்து பார்த்து வருகிறோம். கடந்த மாதம் பரிந்து பேசும் ஜெபத்தைக் குறித்து பார்த்தோம். அந்த வரிசையில் இந்த மாதம் யார் யார் உபவாசித்து ஜெபித்தார்கள்? எதற்காக உபவாசித்தார்கள்? என்பதைக் குறித்துப் பார்க்கப் போகிறோம்.

## உபவாச ஜெபம்

உபவாச ஜெபம் என்றால், நம் உணவைத் தியாகம் செய்து ஜெபிக்கும் ஜெபம். உபவாசம் என்பது நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவதற்கான அடையாளம். யோவேல் 2:12-16 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும் முழு இருதயத்தோடும் நாம் தேவனிடம் திரும்ப வேண்டும்.

வேதத்தில் 40 நாள் உபவாசம், 21 நாள் உபவாசம், 3 நாள் உபவாசம் என்று அநேக உபவாசங்களைக் குறித்து நாம் பார்க்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் பல்வேறு மனிதர்கள் வித்தியாசமான சூழலில் உபவாசித்து ஜெபித்ததாக நாம் வாசிக்கிறோம். ஒவ்வொருவருடைய ஜெபமும் தனித்தன்மையுடையது.



### எஸ்தர் ஏன், எதற்காக உபவாசித்தாள்?

எஸ்தர் ஒரு யூதப் பெண். அவள் சூசானிலிருந்து எருசலேமில் வந்து அகாஸ்வேரு இராஜாவின் அரண்மனையில் இராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

ஆமான் எல்லா அதிகாரிகளுக்கும் தலைவனாக இருந்ததால் தன்னை எல்லோரும் வணங்க வேண்டும் என்று அவன் உள்ளத்தில் பெருமை கொண்டிருந்தான். மொர்தெகாய் அவனை வணங்காததால் கொலைசெய்ய தீர்மானித்தான். அவர் ஒரு யூதன் என்று தெரிந்ததும், தேசத்தில் இருந்த எல்லா யூதர்களையும் கொல்வதற்குத் திட்டம் போட்டான். அவன் அகாஸ்வேரு ராஜாவிடம், யூதர்களைப் பற்றித் தவறான செய்திகளைச் சொல்லி அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று ஒரு சட்டத்தைப் போட ஏவினான். ராஜாவும் ஆமானுக்கு அதிகாரத்தைக் கொடுத்தார். அதனால் ஆமான், யூதர்கள் எல்லாரையும் ஆதார் மாதம் 13-ஆம் தேதி கொன்றுவிட வேண்டுமென்று மக்களுக்கு ஒரு சட்டத்தைப் போடுகிறான்.

எஸ்தருக்கு இந்தச் சட்டத்தைப் பற்றித் தெரியாது. அதனால், எஸ்தரின் சித்தப்பாவாகிய மொர்தெகாய் 'நீ போய் இராஜாவிடம் பேசு' என்றார். 'இராஜா கூப்பிடாமல் அவருக்கு முன்பாகப் போனால், மரணம் தான் சம்பவிக்கும் என்று நன்கு தெரிந்திருந்தும், தன்னுடைய ஜனங்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால், நான் ராஜாவின் முன்பு சென்று தான் ஆக வேண்டும் என்று துணிந்து செல்ல முற்பட்டாள். இந்த இக்கட்டான நிலையில், 'மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்' (எஸ்தர் 4:16) என்று மொர்தெகாயிடம் சொல்லி அனுப்பினாள். யூதர்களுக்கு எதிராக வந்த ஆபத்துக்களை எதிர்த்து அவளும் அவள் தாதிமாரும் உபவாசித்து ஜெபித்தார்கள்.

இந்த ஜெபத்தின் பெலத்தோடு இராஜாவைப் பார்க்கச் சென்ற எஸ்தருக்கு ராஜாவின் கண்களில் தயை கிடைத்து, யூதருக்கும் சகாயம் கிடைத்தது. யூதருக்கு எதிராகத் திட்டம் தீட்டிய ஆமான், தான் செய்த தூக்குமரத்திலேயே தூக்கிலிடப்பட்டான். உண்மையான உடைந்த உள்ளத்துடன் எஸ்தரும் யூதரும் ஏறெடுத்த உபவாசத்தைக் கர்த்தர் கனப்படுத்தினார் (எஸ்தர் 4:13-16).

**இப்படி வேதத்தில் அநேகர் உபவாசித்து ஜெபித்திருக்கிறார்கள் அவர்களில் சிலரைக் குறித்து பார்க்கலாம்...**

## 40 நாட்கள் உபவாசித்தவர்கள்:



**மோசே:** சீனாய் மலையில் 10 கற்பனைகளைப் பெற்றுக்கொள்ள 40 நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்தார் (உபா. 9). கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு கீழே வரும்போது இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியை செய்து வணங்கியதால் ஆத்திரமடைந்து 10 கட்டளைகளை உடைத்துப்போட்டார். மறுபடியும் மக்களின் மன்னிப்பிற்காகவும், 10 கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் 2வது முறை 40 நாட்கள் உபவாசம் இருந்தார்.



**இயேசு:** தன்னுடைய 3 1/2 வருட ஊழியத்தின் பணியை ஆரம்பிப்பதற்கு முன் வனாந்திரத்தில் 40 நாட்கள் உபவாசம் இருந்தார். 40 நாள் உபவாசத்திற்குப் பின் சாத்தானால் உயர்ந்த மலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சாத்தானை ஜெயித்தார் (மத்தேயு 4:2, 8).

## 3 நாட்கள் உபவாசித்தவர்கள்:

**எஸ்றா:** பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு செல்லும் பயணத்தின் பாதுகாப்பிற்காக 3 நாள் உபவாசித்து ஜெபித்தார் (எஸ்றா 8:15-21).

**யோனா:** மீன் வயிற்றில் இருந்தபோது, 3 நாள் உபவாசித்து ஜெபித்தார் (யோனா 1:17).

**பவுல்:** தன் வாழ்க்கையில் தேவ சித்தத்தை தெரிந்துகொள்ள 3 நாள் உபவாசித்து ஜெபித்தார் (அப். 9:9).

**யோசபாத்:** எதிரிகளின் ஆக்கிரமிப்பைக் கண்டபோது, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான். எல்லாரும் ஒருமனப்பட்டு ஜெபித்தபோது தேசத்தைச் சூழ்ந்துநின்ற எதிரிகள் ஒருவருக்கொருவர் விரோதமாய் எழும்பித் தங்களுக்குள் வெட்டுண்டு விழுந்தார்கள் (2 நாளா. 20:22).

**தானியேல்:** யூத மக்களுடைய வாழ்வில் தேவனுடைய திட்டத்தை அறிந்துகொண்ட பின்னர் தனது மக்களுக்காக ஜெபிக்க தீர்மானிக்கிறார் (தானி. 9:3-21).

**நெகேமியா:** எருசலேமின் அலங்கம் இடிக்கப் பட்டதையும், வாசல் சுட்டெரிக்கப்பட்டதையும் நெகேமியா கேள்விப்பட்டதும், உட்கார்ந்து அழுது, துக்கித்து, உபவாசித்து, பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடுகிறார் (நெகேமியா 1:4).

**வேதாகமத்தில் உபவாச ஜெபம் என்பது தேவனை அணுகும் ஒரு வல்லமையான ஆயுதமாக இருக்கிறது. எஸ்தர், மோசே, இயேசு, பவுல் எனப் பலர் உபவாச ஜெபத்தின் மூலம் தேவனுடைய தயையை பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் சந்தித்த ஒவ்வொரு சவால்களிலும், உபவாச ஜெபம் அவர்களுக்கு வெற்றி வழியாய் இருந்தது. இந்நாட்களிலும் நாம் சந்திக்கின்ற குழப்பங்கள், போராட்டங்கள், முடிவற்ற சந்தேகங்கள், சோதனைகள் இதையெல்லாம் வெல்லும் ஆற்றல், உபவாச ஜெபத்திற்கு உண்டு. பெயர்க்க முடியாத மலைகளையும், தகர்க்க முடியாத பாவக் கட்டுகளையும், சாதிக்கவே முடியாத காரியங்களையும் சாதித்துக்காட்டும் வல்லமை உபவாச ஜெபத்திற்கு உண்டு. உபவாசித்து ஜெபியுங்கள்! தடைபட்ட காரியங்களை ஜெயித்துக்காட்டுங்கள்!**

# செய்திகள்!

## அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்றும் 3 லட்சம் இந்திய மாணவர்களை வெளியேற்றத் திட்டம்



அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 3 லட்சம் இந்திய மாணவ, மாணவியரை வெளியேற்ற அந்த நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் சுமார் 11 லட்சம் வெளிநாட்டு மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இதில் 3.31 லட்சம் பேர் இந்திய மாணவ, மாணவியர் ஆவர். சுமார் 2.77 லட்சம் சீன மாணவர்கள். 43,149 தென்கொரிய மாணவர்களும் அமெரிக்காவில் பயில்கின்றனர். கனடா, வியட்நாம், தைவான், சவுதி அரேபியா, பிரேசில், மெக்ஸிகோ நாடுகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரும் அமெரிக்காவில் கணிசமாக உள்ளனர்.

அமெரிக்க கல்வி நிறுவனங்களில் சேர அந்த நாட்டு அரசு சார்பில் எப் 1 விசா வழங்கப்படுகிறது. இந்த விசாவை பெற்று அமெரிக்க கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியர், விருப்ப பயிற்சி திட்டத்தில் (ஓபிடி) இணைந்து அமெரிக்காவில் பணியாற்ற முடியும்.

அதாவது இளங்கலை பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்கள் ஓபிடி திட்டத்தில் ஏதாவது ஓர் அமெரிக்க நிறுவனத்தில் ஓராண்டு வரை பணியாற்றலாம். அறிவியல், தொழில்நுட்பம், இன்ஜினீயரிங், கணிதம் உள்ளிட்ட துறைகளில் பட்டம் பெற்றவர்கள், அமெரிக்க நிறுவனங்களில் 3 ஆண்டுகள்வரை பணியாற்றலாம்.

ஓபிடி திட்டத்தின் மூலம் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான மாணவ, மாணவியர் அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இந்தச் சூழலில் ஓபிடி திட்டத்தை ரத்து செய்யும் வகையில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய மசோதா தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கு 'நேர்மையான உயர் திறன் அமெரிக்க சட்டம் 2025' என்று பெயரிடப்பட்டுள்ளது. புதிய மசோதா குறித்து அமெரிக்காவில் பயிலும் இந்திய மாணவ, மாணவியர் கூறியதாவது: சுமார் ரூ.1 கோடிவரை செலவு செய்து அமெரிக்காவில் கல்வி பயில்கிறோம். பட்டப்படிப்பை நிறைவு செய்தபிறகு ஓபிடி திட்டத்தில் 3 ஆண்டுகள்வரை அமெரிக்காவில் பணியாற்ற வாய்ப்பு கிடைக்கும். இதன்மூலம் கல்விக்காகச் செலவு செய்த பெரும் தொகையில் ஓரளவுக்கு ஈடுகட்ட முடியும்.

தற்போது அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புதிய மசோதாவால் ஓபிடி திட்டம் முழுமையாக ரத்து செய்யப்படும். அதாவது எந்தவொரு அமெரிக்க நிறுவனமும் வெளிநாட்டு மாணவர்களைப் பணியில் அமர்த்த முடியாது.

அமெரிக்க மக்களின் வேலைவாய்ப்பை, வெளிநாட்டினர் பறிப்பதாக அதிபர் டொனால்டு ட்ரம்ப் கருதுகிறார். இதன்காரணமாகப் புதிய மசோதா கொண்டு வரப்பட்டு உள்ளது. இந்தியாவை சேர்ந்த சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் அமெரிக்காவில் கல்வி பயின்று வருகின்றனர். அவர்கள் வலுக்கட்டாயமாக அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட வாய்ப்பிருக்கிறது. இவ்வாறு இந்திய மாணவ, மாணவியர் தெரிவித்தனர். இதுகுறித்து அமெரிக்க அதிபர் மாளிகை வட்டாரங்கள் கூறியதாவது: ஓபிடி திட்டத்துக்காக அமெரிக்க அரசு சார்பில் பல்வேறு நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. இதன்படி ஓராண்டுக்கு 4 பில்லியன் டாலர் வரை மானிய தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது அமெரிக்க மக்களின் வரிப்பணம். இதை வெளிநாட்டினருக்காகச் செலவிட முடியாது.

ஓபிடி திட்டத்தால் வெளிநாட்டினருக்கே வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. அமெரிக்க இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி பரிதவிக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண 'நேர்மையான உயர் திறன் அமெரிக்க சட்டம் 2025' கொண்டு வரப்பட்டு உள்ளது. இது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்படும். இதன்பிறகு ஓபிடி திட்டத்தில் அமெரிக்காவில் பணியாற்றி வரும் வெளிநாட்டினர் அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். இவ்வாறு அமெரிக்க அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. – **இந்து தமிழ் திசை, 09 ஏப்ரல் 2025**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# தந்தையர் தினம்

## ஜூன் 15

குழந்தைகளின் முன்னேற்றத்திலும், பாதுகாப்பிலும் தந்தையின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கிறது. நம் வாழ்க்கையில் அப்பாவின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

### தந்தைக்கு செய்ய வேண்டியவை

- தன் குழந்தைகள் மற்றும் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்திருக்கும் தந்தைக்கு, தாய்க்கு இணையான அன்பையும் கனத்தையும் கொடுக்க வேண்டும்.
- சிலர் தாயை மிகவும் நேசிப்பார்கள்; ஆனால் தந்தையை நேசிக்கத் தவறி விடுகிறார்கள். தன் துக்கத்தையும், வேதனையையும் வெளிக்காட்டாமல் தன் கடமைகளை எல்லாம் செய்பவர் தந்தை. அம்மாவுக்குப் பிறகு நம் மனதுக்கு மிக நெருக்கமானவர் என்றால் அது நம் அப்பாதான்.
- தந்தையின் அன்பு அன்னையைப் போல் இல்லையென்றாலும், அப்பாதான் நம்மை உள்ளிருந்து வலிமையாக்குகிறார். எனவே அவரைக் கொண்டாட வேண்டும்.
- எப்பொழுதும் துக்கத்தை தனக்குள்ளேயே வைத்துக்கொண்டு நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறவர் தந்தை. தந்தையை பின்பற்றியே தங்கள் குழந்தைகள் வருவார்கள். எனவே தந்தையர் பிள்ளைகளுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும்.

### அப்படி வேதத்தில் உதாரணமாக இருந்த தகப்பன் யார்?

ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான் (I இராஜா. 15:11) என்று கூறுகிறது. தன் குடும்பத்துக்கு ஒரு நல்ல முன்மாதிரியை அமைத்துத் தங்கள் குழந்தைகள், குடும்பங்களைக் கர்த்தரிடம் நெருக்கமாகக் கொண்டு வருவது தந்தையின் பொறுப்பு. இதுபோலவே தாவீது தன் மகனாகிய ஆசாவுக்கு முன் மாதிரியாக நடந்து கொண்டார். ஆசா 41 வருஷம் எருசலேமிலே ராஜ்யபாரம் பண்ணினான். அவனுடைய தாய் மாகாள் அருவருப்பான விக்கிரகத்தை உண்டு பண்ணி வழிபட்டு வந்ததோடு, விக்கிரக தோப்பு வைத்திருந்தாள் என்றும் இந்த அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஆசா அவற்றையெல்லாம் அழித்துப் போட்டு மாகாளை ராஜாத்தியாக இராதபடி விலக்கி விட்டான் என்று பார்க்கிறோம். அவனுடைய 41 வருஷ ராஜ்யபாரத்தில் அவனுடைய வார்த்தைகள் அவன் வாழ்க்கையை எதிரொலிக்கவில்லை, ஆனால் அவனுடைய செயல் அவன் வாழ்க்கையை எதிரொலித்தது. அவன் தேவனுக்காக வாழ்வதில் உறுதியாக இருந்தான் அவனுடைய வார்த்தைகளைவிட, வாழ்க்கை உரத்த சத்தமாகப் பேசியது. இராஜாவாகிய ஆசாவின் இருதயம், அவனுடைய தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல தேவனோடு ஒப்பரவாக இருந்தது என்று நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

**தந்தையர் தின நல்வாழ்த்துக்கள்!!**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 05 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## விழுப்புரத்தில்...

நாள்: ஜூன் 8 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: மாலை 4:00 - 7:00

இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், H.H. Complex
1st floor. Opp நம் நாடு டெக்ஸ்டைல்ஸ்.

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 83444 11022 / 88705 18324.

## சேலம் மாவட்டம்
## கல்வராயன்மலையில்...

நாள்: ஜூன் 8 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: காலை 10:00 - மாலை 4:00

இடம்: ஸ்ரீ லட்சுமி அம்மாள் திருமண மண்டபம்
பிரபாவதி பள்ளி அருகில், சேலம் ரோடு, கருமந்துறை.

செய்தியும் ஜெபமும்: சகோ. சாம் ஜெபராஜ்

தொடர்புக்கு: 9962085523, 93858 35867,
9597754872

## வள்ளியூரில்

நாள்: ஜூன் 21 (சனிக்கிழமை)

நேரம்: காலை 9:00 - மாலை 4:00

இடம்: மரியா பெண்கள் கலைமற்றும்
அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர் ரோடு, வள்ளியூர்

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 9443120544, 9750955548

## செங்கல்பட்டு மாவட்டம்
## திருப்போரூரில்

நாள்: ஜூன் 22 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: மாலை 4:00 - 7:00

இடம்: COME Compassion Home
கருணை தெரு, மேட்டு தண்டலம், திருப்போரூர்,
(தண்டலம் பஸ் நிலையம் அருகில்)

செய்தியும் ஜெபமும்: சகோ. காலேப்

தொடர்புக்கு: 9710809626

